காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

25—7—71

★

உள்ளே......

வேலை, போச்சு!
(அறிஞர் அண்ணாவின் சிறுகதை)

அந்த மூன்றாவது போர் அதுதானே?
(தலையங்கம்)

காவல் துறை பற்றி கலைஞர்
(சட்டமன்ற செய்தி)

சுத்தானந்த பாரதியார் பதில் சொல்வாரா?
(சிறப்புக் கட்டுரை)

சோழமாதேவி
(தொடர் கதை)

விலை 20 காசு

சென்னை சூளை அருகே மாநகராட்சியின் மொத்தக் காய்கறி விற்பனை மார்க்கட்டுக்கு மேயர் கணேசன் தலைமையிலும் அமைச்சர் நாவலர் முன்னிலையிலும் முதல்வர் கலைஞர் அடிக்கல் நாட்டி பேசுகிறார். மேடையில் மாநகராட்சி தி. மு. க. தலைவர் வி. முனுசாமியும் அமர்ந்துள்ளார்.

சொந்தக் கட்சிக்காரர்கள் என்பதால் தலையீடு கொள்ளப்படுவதுமில்லை; மாற்றுக் கட்சிக்காரர்கள் என்பதால் முறையீடு தள்ளப்படுவதுமில்லை!

காவல்துறைபற்றி கலைஞர் படப்பிடிப்பு!

அரசாங்கத்திற்கு அதிகாரிகள், அது எந்த அரசாங்கமாக இருந்தாலும், அதற்கு விசுவாசமாக நடந்து கொள்ளவேண்டும் என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள்!

அரசாங்கத்தை நடத்துகின்ற கட்சிக்கு விசுவாசமாக இருக்க வேண்டுமா?—என்றால் இல்லை.

தலையீடுகள்!

அரசாங்கத்தின் காரியங்கள்—அரசாங்கத்தின் செயல் முறைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய பணி இவைகளுக்கு — எந்த அதிகாரியாக இருந்தாலும், அவர்கள் எந்தத் துறையிலிருப்பவர்களாயிருந்தாலும், விசுவாசமாக இருக்கவேண்டும்!

அரசாங்கத்தை நடத்துகின்ற கட்சிக்கு விசுவாசமாக இருக்க வேண்டும் என்று நான் கூறவில்லை!

எதிர் தரப்பிலே இருப்பவர்கள் கூறினார்கள். அரசியல் தலையீடு இந்தத் துறையிலே நிச்சயமாக இருக்கக்கூடாது என்று!

அரசியல் தலையீடு — காவல் துறையிலே இருக்கிறதா — என்பதை அவர்கள் பேசிய பேச்சிலிருந்தே புரிந்துகொள்ளலாம்!

அரசியல் தலையீடு கூடாது என்று பேசியவர்கள் தாங்கள் எந்தெந்த நேரங்களில் தலையிட நேர்ந்தது என்பதையும் கூறினார்கள்! ஆனால் நான் சென்றது ஒரு அநியாயத்தைக் கண்டுபிடிப்பதற்காக!—என்று குறிப்பிட்டார்கள்!

அதிலும் குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கே. டி. கே. தங்கமணி பேசும்போது நான்கூட ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் தலையிட்டேன். ஆனால் ஒரு அநியாயத்தைக் கண்டிப்பதற்காகத் தலையிட்டேன்—என்று குறிப்பிட்டார்.

நியாயமா? அநியாயமா?—என்பதை ஆராய்வது யார்?

ஆகவே, தலையீடு — தலையீடு தான்! தலையிட்ட பிறகு — நான் நியாயத்திற்காகத் தலையிட்டேன் என்று சொன்னாலும், அநியாயத்திற்காகத் தலையிட்டேன் என்று சொன்னாலும் அது பொருந்தி வராது!

ஆனால் அந்தத் தலையீடுகளை வைத்து ஏற்பட்டது என்ன? அந்தத் தலையீட்டின் காரணமாக ஒரு நியாயமானகாரியம் அநியாயமாக மாற்றப்பட்டதா அல்லது அநியாயம் நியாயமாக ஆக்கப்பட்டதா? என்பதைத்தான் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்!

அரசு விடுத்த அறிக்கை

அப்படி அரசியல் தலையீடு இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் போலீஸ் தலைமை அதிகாரியின் மூலமாக 1968-ம் ஆண்டு அனைவருக்கும் ஒரு அறிக்கை அனுப்பப்பட்டது.

"எல்லா அதிகாரிகளும் குற்றங்களைத் தடுப்பதில் — அல்லது குற்றங்களைக் கண்டுபிடிப்பதில்—அல்லது சட்டத்தின் ஒழுங்கை நிலைநாட்டுவதில் தங்களது கடமைகளை நிறைவேற்றும்போது சட்டத்தில் சொல்லியுள்ள கூற்றைக் கண்டிப்பாகப் பின்பற்றி நடக்கவேண்டும் என்பது மிகவும் இன்றியமையாதது என்பதை மனதில் கொள்ளவேண்டும்."

அவசியமற்ற முறையில் அல்லது நியாயமற்ற முறையில்—அல்லது நியாயமற்ற வகையில் செல்வாக்கினை எவர் பயன்படுத்தினாலும், காவலர்கள் அதை உறுதியாக எதிர்க்க வேண்டும்—நியாயமும் நேர்மையும் நிலைநாட்டப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். அத்துடன், சட்டம் அல்லது நடைமுறைகளில் சொல்லியிருப்பவைகளுக்கு மாறான நடவடிக்கை எதையும் பிறர் கொண்டுவரும் செல்வாக்கிற்கு இணங்கி அல்லது அடிபணிந்து மேற்கொள்ளக் கூடாது!

—என்று கூறும் அந்த அறிக்கை காவல்துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

அந்த முறையில்தான் காவல் துறை செயல்பட்டு வருகிறது!

ஒன்றிரண்டு இடங்களில் தவறுகள் இருப்பது சுட்டிக் காட்டப்பட்டது. அப்படிப்பட்ட தவறுகளும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் நாங்கள் அரசின் சார்பில் கூட்டப்படும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டிலும், அதைத் தொடர்ந்து நடைபெற்ற காவல்துறை அதிகாரிகள் மாநாட்டிலும் நான் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறேன்!

யார் எந்தப் பிரச்னையைக் கொண்டு வந்து சொன்னாலும், அதைக் கொண்டு வந்து சொல்கிறவர்கள் யார் என்று பார்க்காமல், அந்தப் பிரச்னையிலுள்ள நியாய-அநியாயங்களைப் பார்த்து அதற்கேற்றவாறு நடவடிக்கை எடுங்கள்!

"தவறுகள் செய்யுங்கள்—என்று நானே சொன்னாலும்கூட அதற்கு நீங்கள் பணியாதீர்கள்!"—என்று ஆட்சித் தலைவர்கள் மாநாட்டிலும், காவல்துறை அதிகாரிகள் மாநாட்டிலும் எடுத்துக் காட்டியிருக்கின்றேன்!

(14-ம் பக்கம் பார்க்க)

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 | ஆறு மாத சந்தா ரூ. 5

மலர் 8 | 25—7—71 | இதழ் 2

அந்த மூன்ருவது போர் அதுதானே?

1971-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் *19*-ஆம் நாள் கியூபா வணிகக் கழகத்தில் ஒரு வெள்ளி விழாக் கூட்டம் நடைபெறுகிறது. கியூபா, புரட்சிப் போரிலே பெற்ற வெற்றியைப் பற்றியும், அந்தப் போரிலே அது சந்திக்க நேர்ந்த இடையூறுகள் பற்றியும் பேசப் படுகிறது. வெளியார் தலையீடுகள் பற்றிக் குறிப்பிட நேர்ந்தபொழுது அவர் சொல்கிருர்:

> **Mister Nixson started his administration with one war on his hands, and now he has three; all three lost, increasingly more so.**

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் பதவிப் பொறுப்பில் இருக்கும் ஒருவரைப்பற்றிக் கூறப்படுவது இது. அந்தப் பதவியில் இப்போது அமர்த்திவைக்கப் பட்டிருப்பவர் நிக்சன். நிக்சன் யார் என்பதற்குப் புதிய விளம்பரங்களோ, வியாக்யானங்களோ தேவையில்லை இந்த நாட்டுக்கு. இந்த நாட்டுக்கு மட்டுமல்ல-உலகத்தின் எந்த வொரு நாட்டுக்கும்தான். அந்த நிக்சனைப் பற்றித்தான் கியூபாவில், வெற்றிவிழாக் கூட்டத்தில் பேசப்படுகிறது!

> "நிக்சன், தன் கரங்களில் ஒரு யுத்தத்தை வைத்துக் கொண்டு, நிர்வாகத்தைத் தொடங்கினுர். இப்போது அவர் மூன்று யுத்தங்களைக்கொண்டிருக்கிருர். மூன்றே முடிவல்ல, இன்னும் பலவாக அதிகரித்துக்கொண்டிருக்கிறது"

நிக்சனைப் பற்றி கியூபாவில் எடுத்துக் காட்டப்படும் படப் பிடிப்பு இதுதான்! அதாவது வியட்நாம் பிரச்னையை மட்டுமே கொண்டிருந்த அமெரிக்கா, நிர்வாகக் குறைபாடுகள் காரணமாக இப்போது மூன்று யுத்தங்களுக்குக் காரணமாகி இருக்கிறது; அது பெருகவும் கூடும் என்று கூறப்பட்டுள்ளது.

அவ்வாறு கூறுவது யாரோ ஒரு ஏனோதானோ அல்ல; வெறும் மேடைப் பேச்சுக்காக வந்து காரசாரமாகப் பேசி கரவொலிகளைப் பெற்றுக்கொள்வதற்காக மட்டுமே பேசிய பேச்சுக்களும் அல்ல இவை. நிக்சனைப் பற்றி, உண்மையிலே பயங்கரமான முறையிலே சுமத்தப்படும் குற்றச்சாட்டு இது. கூறுபவர், கியூபா குடியரசின் பிரதமர் பிடெல் காஸ்டிரோ.

குற்றம் கூறுபவர்கூட, உலகுக்கு அறிமுகமாகாத ஒருவர் அல்ல! பிடெல்காஸ்டிரோவைப் புரிந்துகொள்ள முடியாத அரசியல் தலைவர்கள் உலகத்திலேயே இருக்க முடியாது.

ஒரு நாட்டின் நிருவாகப் பொறுப்பிலிருந்து கொண்டு, இன்னொரு வல்லரசு நாட்டின் நிர்வாகப் பொறுப்பிலிருப்பவரைப் பற்றி யுத்த வெறி பிடித்தவர் என்கிற முறையிலே விமர்சனம் செய்கிருர் பிடெல்காஸ்டிரோ.

இது அமெரிக்கக் குடியரசுத் தலைவர் பதவியிலிருப்பவரைப் பற்றி நேர்முகமாகக் கூறும் குற்றச்சாட்டாகும். என்ருலும் பொதுவாக அமெரிக்க நாட்டின் அரசியல் கொள்கைகள் மீதான குற்றச்சாட்டுக்கள் என்றுதான் அரசியல் விமர்சகர்கள் கூறுவார்கள். இதே அடிப்படையில், அமெரிக்கா மீதான இன்னொரு குற்றச்சாட்டையும் கவனிப்போம்.

வல்லரசு நாடுகள், தமது வல்லரசுப் பிடியைப் பலமாகப் பற்றிக் கொள்வதற்கும், உலக நாடுகளின் மீது ஆதிக்கக் கரத்தை கால முழுவதும் நீட்டிக் கொண்டே இருப்பதற்குமான முறையில் எடுத்துக் கொண்டு வந்திருக்கிற நடவடிக்கைகளின் விளைவாகத்தான், இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு—

ஜெர்மனியை கிழக்கு ஜெர்மனி, மேற்கு ஜெர்மனி என்று கூறு போட்டார்கள்!

வியட்னுமை வட வியட்னும், தென் வியட்னும் எனப் பிரித்து வைத்தார்கள்.

கொரியாவை வடகொரியா, தென்கொரியா என்று உடைத்துப் போட்டார்கள்.

இந்தியாவை இந்தியா, பாகிஸ்தான் என்று துண்டித்தார்கள்.

இவைகளின் காரணமாக உலகம் முழுவதும் ஒன்றுக்கொன்று பகைமை காட்டி, வகுப்பு வாதத் தீயில் விழுந்து வெந்து கருகும்படிச் செய்துவிட்டார்கள்.

வகுப்புவாதம், மற்றும் ஆதிக்கப் போட்டிகள் காரணமாகத்தான் இன்றுவரையில் காஷ்மீரச் சிக்கல் முற்றுப் பெறவில்லை;

இதே காரணமாகத்தான் வியட்னும் விவகாரம் தீர்வுக்கு வரவில்லை.

இதே காரணமாகத்தான் அரபு-இஸ்ரேல் விவகாரம் குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது.

வல்லரசு நாடுகளின் கொடுஞ் செயல்கள்தான் இவற்றுக்குக் காரணம் என்றும், அமெரிக்க வல்லரசின் பங்குதான் அனைத்திலும் தலையாயதாக இருந்து

(16-ம் பக்கம் பார்க்க)

சுத்தானந்த பாரதியார் பதில் சொல்வாரா?

— புதுவை அரிமதி தென்னகன் —

பாண்டிச்சேரி மலர் என்ற பெயரில், ஆனந்தவிகடன் தமிழ்த் தொண்டாற்றியுள்ளது. மலர்என்ற பெயரில் துண்டு துணுக்குகளையெல்லாம் ஒன்றாக்கிக் கொடுக்கப்பட்டிருக்கும் செய்திகளைப் பார்த்துப் புதுவைப் பெருமக்கள் வயிறு வலியெடுக்கச் சிரிக்கின்றார்கள்.

அபத்தமே! உன் பெயர்தான் ஆனந்தவிகடனா? என்று கேட்குமளவிற்கு மலரில் காணும் செய்திகளைப் பார்த்து கேழ்வரகில் நெய்யை எதிர்பார்த்தவர்கள் மட்டில் வருந்தினார்கள்.

'அரோவில்' அட்டைப்படமும், அரவிந்தர் பெயரால் உள்ள ஆஸ்ரமத்தின் திறமும் மலருக்கு அணிசெய்தனவென்று மகிழ்ச்சியடைபவர்களைப்பற்றியோ, பொய்யும் புளுகும்செய்திகளாக வந்துள்ளனவென்று கொதிப்பவர்களைப்பற்றியோ எனக்குக் கவலையில்லை.

ஆனால்—

“புதுமைசெய்த புதுவைவாழ்க” என்று கவிதையார் புதுவையை வாழ்த்தும் கவியாகி சுத்தானந்த பாரதியார் அறிந்தோ அறியாமலோ செய்துள்ள கொடுமையைக் குறிப்பிட்டுக் காட்டுவதே என் கடமை.

புதுமை செய்த புதுவையின் பெருமைகளை அடுக்கடுக்காக மிடுக்கான நடையில் எடுத்தெடுத்து வைத்த 'கவியோகி' அவர்கள், சுட்டிக்காட்ட வேண்டிய பெருமையைச் சொல்லாமல் விட்டுவிட்டார்!

கோடிட்டுக் காட்டவேண்டிய சிறப்பைக் கூறாமலேயே விட்டுவிட்டார்!!

விருப்புவெறுப்புகளுக்கு ஆட்படாதவராக இருக்கவேண்டிய 'யோகியார்' வேண்டுமென்றே இப்படிச் செய்தாரா? “அவா எதிர்ப்புகளை எதற்காகப் பெறவேண்டும்” என்ற அச்சத்தில் இப்படிச் செய்துவிட்டாரா? விளக்கத்தைச் சொல்லாமல் வினாக்களைத் தொடுப்பதாகநினைக்கின்றீர்களா?

செய்தி இதுதான்; சுத்தானந்தர் செய்ததும் இதுதான்!!

ஓம் சக்தி என ஒலக் கருங்கடல் புதுவையில் ஒயில் நடனம் செய்கிறதாம்.

புரிகிறதா?

கடல் நடனம் செய்கிறதாம்!! காதலாவது புளியட்டும் போகட்டும்; மிகுதியைக் கேளுங்கள்!

“அரவிந்தயோகியின் அருளைப் பாடியே ஆர்கலிகை கொட்டியாடுது பார்” என்று புதுவை பாராட்டப்படுகிறது.

“தேசக் கவிக்குயில் பாரதியாருடன்
தெய்விகப் பூரண யோகியுடன்
நேச சுப்ர மண்யம் ஐயருடன் வாழ்ந்த
நினைவு நீண்ட இலக்கியமே”

என்று புதுவை புகழப்படுகிறது.

புதுவையில் உருவாகும் 'ஆரோவில்' 'கவலையற்ற கலை விருந்தே' எனச் சீராட்டப்படுகிறது.

“ஆனந்த ரங்கக் குறிப்புடனே-பாரதி
ஆவேச தேச நெருப்புடனே”

என்று புதுவையும் பாராட்டப்படுகிறது; அத்துடன் திரும்பத்திரும்ப பாரதியும் பாராட்டப்படுகிறார்.

இங்கேதான் நம் வினாவும் புறப்படுகிறது; கவி யோகியின் விடையும் எதிர்பார்க்கப்படுகிறது.

சிறப்புக் கட்டுரை!

அரவிந்தர் வாழ்ந்த நகரம் புதுவை;

அரோவில் உருவாகும் இடம் புதுவை;

பாரதிக்கு வாழ்வளித்த மான் புதுவை;

“சுப்ரம்மண்ய' ஐயருடன் தொடர்பு கொண்ட ஊர் புதுவை;

அத்தனையும் உண்மை!

ஆனால்,

புதுவையின் புகழ்க்குக் காரணம் அரவிந்தரும், ;ஆனந்தரங்கப் பிள்ளையும் மட்டுந்தானா?

சுப்பிரமணிய பாரதியாரால் மட்டுமா புதுவை புகழடைந்தது.

கவி யோகியாரே! முற்றுந் துறந்த முனிவரே! விருப்பு வெறுப்புகளற்றவரே! ஓடிவந்தவர்கள், பாதுகாப்பை நாடிவந்தவர்களால் மட்டுந்தானா புதுவை புகழையடைந்தது?

புதுவையைத் தாயென்றால், அந்தத் தாய் வயிற்றுள் பிறந்து, கடல் புதுவையில் நடனமாவது செய்யட்டும்; புதுவையோடு அந்தத் தாய் மடியில் தவழ்ந்த கனகசுப்புரத்தினம் என்ற கவிஞனைக் கவியோகி மறந்துவிட்டாரா? இல்லை......... கனகசுப்புரத்தினம் கவிஞன்தான் எனும் எண்ணத்தைத் துறந்துவிட்டாரா?

நேரிடையாகவேகேட்கவிரும்புகிறோம்!

கனகசுப்புரத்தினம் பாரதிதாசனாக ஆனதும், பாரதிதாசன் பாவேந்தன்ஆனதும் கவியோகிக்குத் தெரியுமா?

இன்னும் பச்சையாகவே கேட்க விரும்புகிறோம்!

புரட்சிப் பாவேந்தன் பாரதிதாசன் மாபெரும் கவிஞன் என்பதைக் கவியோகி ஒப்புக் கொள்ளுகிறாரா? இல்லையா?

ஒப்புக்கொள்ளுகிறார் என்றால், பாரதியை இருமுறை பாராட்டிக் கூறியவர் ஒரு முறையேனும் பாராட்டக்கூட வேண்டாம், குறிப்பிட்டுக் காட்ட மறந்ததேன்?

அரவிந்தரால் புதுவை பெற்ற புகழைவிட, புதுவை ஆயிரங்கோடிமடங்கு பாவேந்தரால் புகழ்பெற்றது என்று உண்மைத் தமிழர்கள் நினைப்பதுபோல்கவியோகி நினைக்க வேண்டாம்; ஊருக்கும் காட்டவேண்டாம்; பாரதிதாசனும் புதுவைதான்' என்றாவது காட்டியிருக்கலாமே.

காட்டாமல் விட்டது ஏன்? விகடனாரின் முகத்துப் புன்னகைமேல் அவ்வளவு விருப்பமா!!

தமிழுணர்வு வேகத்தால் பாட்டுப் படைகளை வடித்தெடுத்த பாவலனைக் கவியோகி, கவிஞரென, மாபெரும் புலவரென ஏற்றுக்கொள்ள மறுத்தால், இந்த உலகம் வேறெவனையாவது கவிஞன் என்று ஏற்றுக்கொள்ளுமா ?

சுத்தானந்தரின் சுருக்கமான விடையாவது கிடைக்கும் என நம்புகிறோம்!

எண்ண பலத்தைத் தவிர. மற்றைய பலங்களைக் கொண்டவர்களால், மடையனை மாமேதையாக்க முடியுமேயன்றி, மேதையைப் பேதையாக்கி விடமுடியாது என்பதை மட்டும் நினைத்துப் பார்த்தால், பாவேந்தரை மறைக்கத் துடிக்கும் மனத்தினர் திருந்த வாய்ப்புண்டு.

ஒரு வார்த்தை...

காரிருளால் கதிரவன் மறைக்கப்படுவதுமில்லை!!

கறைச் சேற்றால் தாமரையின் மணம் விலகப் போவதுமில்லை.

விகடக் காரிருளுக்கு இதைவிட விளக்கம் தேவையில்லை!!

கவியோகிக்கு வேறு மறுப்பும் வேண்டுவதில்லை!! ஃ

[18]

தோற்றார் ரோகண மன்னர்!

ஆட்சிப் பொறுப்பின் அதிகாரங்கள் அனைத்தையும் அரசி விகாரதேவிக்குக் கொடுத்துவிட்ட மன்னர் காகவன தீசர், அனுராதபுரத்து அரசியார் சோழமாதேவியிடமிருந்து கிடைத்த ஓலைக்கு மறுமொழியாக "போர்க் காரணமாக எந்தவொரு நாடும் தன்னை அழித்துக் கொள்ளக்கூடாது" என்று கூறி மேனிவிடங்கனை அனுப்பிய பிறகு ஓலையின் அடக்கம் பற்றிச் சிந்தித்து சிந்தித்துக் குழம்பிய பின்னால், தன்னால் முடிந்ததெல்லாம் அது ஒன்றுதான் என்று மேற்கொண்ட முடிவு காரணமாகவே, கல்யாணிக்குத் தகவல் அனுப்பி தீசனை உடனே வரவழைத்திருக்கிறார் என்ற விவரங்கள் அரசி விகாரதேவிக்குத் தெரிய நியாயமே இல்லை.

அதனாலேயே தூரத்தில் வந்துகொண்டிருந்த அவனைக் கண்டதும் வியப்படைந்து போனாள் விகாரதேவி. தீசனும், தன் தாயை நெருங்கினான். எழுந்து சென்று அவனைக் கட்டித் தழுவிக்கொண்டு, உச்சி மோந்துவிட்டு, "கல்யாணியில் அனைவரும் நலமா?" என்றாள், "எல்லாருமே நலம்தான்" என்று சுருக்கமாகப் பதில் சொல்லியவன் "என்னம்மா, உங்கள் உடல் இப்படிக் கொதிக்கிறது?" என்று கேட்டான். "ஒன்றுமில்லை மகனே! அரசியல் விவகாரங்களை எண்ணிக் கொண்டாலே உடல் சூடாகி விடுவது இயற்கைதானே! அது கிடக்கட்டும் தீசா, நீ எப்போது வந்தாய்? என்றாள் விகாரதேவி, தாய்ப் பாசத்துடன்! "இரவே வந்துவிட்டேன் அம்மா!" என்று கூறியவன், அங்கே முதலமைச்சர் காசியபர் அமர்ந்திருப்பதை அப்போதுதான் கவனித்தானுகையால், அவரின் பக்கம் திரும்பி புன்னகை பூத்தான். பதிலுக்கு அவரும் புன்னகைத்து விட்டு "உங்களுக்கு அனுராதபுரத்து அரண்மனையைவிட, கல்யாணியின் அரண்மனையே அதிகம் பிடித்திருக்கிறதென்றே நினைக்கிறேன்" என்றார், "இங்கே அவன் தங்குவதில்லை என்பதைக் குறிப்பிடுவதற்குத்தானே அப்படிச் சொல்கிறீர்கள்?" என்று காசியபரைப் பார்த்து கேட்டுவிட்டு, விகாரதேவி தீசனைப் பார்த்து "மகனே, நீ இனிமேல் இந்த அரண்மனையிலேயே இருக்கவேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன், நாட்டின் நிலைமையும் அதை வலியுறுத்துகிறது" என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே, அங்கு, நந்திமித்திரனும் கமணனும் வந்து சேர்ந்தார்கள்.

தன் தம்பியைக் கண்ட கமணன் மகிழ்ச்சி பொங்க, ஆனால் கேலி ததும்ப, "அனுராதபுரத்து சிற்றிளவரசர், இங்கே எப்போது வருகை தந்தார்கள்!" என்றான்.

"இரவுதான்!" என்று கூறிவிட்டு, "நீங்கள் நலமா அண்ணா!" என்றான். "பார்க்கிறாயே தெரியவில்லை?" என்று கேட்டுவிட்டு நந்திமித்திரனை ஓரக்கண்ணால் பார்த்துச் சிரித்தான்! குறுக்கிட்ட நந்திமித்திரன், "அரச குடும்பத்தில் பிறந்துவிட்டவர்களுக்கும் சரி, அரசாளும் பொறுப்பிலிருப்பவர்களுக்கும் சரி, நலத்திற்குக் குறைவேது இளவரசே!" என்றான்.

அந்த உரையாடலில், நெகிழ்ந்துபோன விகாரதேவி, தன் மக்கள் இருவரையும் மாறிமாறிப் பார்த்துவிட்டு, நந்திமித்திரன் பக்கம் திரும்பி "நீ எப்போது வந்தாய்?" என்று கேட்டாள். அவன் பதிலை முந்திக்கொண்டு தீசன், "நான் அப்பாவைப் பார்த்துவிட்டு வருகிறேன் அம்மா!" என்று கூறினான். கூறிக்கொண்டே தன் சகோதரனிடமும், முதலமைச்சரிடமும் கண்களால் விடைபெற்றுக் கொண்டு திரும்பினான்.

தீசன் திரும்பிய பிறகு, நந்திமித்திரனைக் கேட்ட வினாவுக்கு விடையாக கமணன், "அவன் இப்போதுதானம்மா வருகிறான். அரை நாழிகைகூட இருக்காது. அதற்குள் தங்கள் அழைப்புக் கிடைத்தது" என்றான்.

அவரவரும் இருக்கையில் அமர்ந்து கொண்டதும் விகாரதேவி "நீ கைது செய்யப்பட்டாய் என்ற தகவல் கிடைத்ததும் நான் மிகுதியும் கவலைப்பட்டேன்! எதற்காக அப்படி ஒரு வதந்தியைக் கிளப்ப வேண்டும்" என்றாள் நந்திமித்திரனைப் பார்த்து.

"வதந்தி அல்ல அம்மா! உண்மையிலேயே கைது செய்யப்பட்டு அரசவையில் விசாரணை செய்யப்பட்டு, விடுதலை செய்யப்பட்டுத்தான்வந்திருக்கிறான்" என்றான் கமணன், தன் தாயைப் பார்த்து.

குறுக்கிட்ட காசியபர், "என்ன இருந்தாலும் எள்ளாளர், எள்ளாளர்தான் என்று நிரூபித்துக் கொண்டார் பார்த்தீர்களா தேவி! அரசியல் காரியங்களில் அவருக்கிருக்கும் அறிவு முதிர்ச்சியினை நமக்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்" என்றார். அது கேட்டு சற்றே கோபமடைந்த விகாரதேவி, காசியபரைப் பார்த்து, "நீங்கள் அனுராதபுரத்து அரண்மனையில் முதலமைச்சராக இருக்க வேண்டியவர்! எப்படியோ ரோகணாவுக்கு அமைச்சராகி விட்டீர்கள்!" என்றாள் சுடச் சுட!

"என் நாட்டுப் பற்றை நீங்கள் ஐயுறுகிறீர்கள் என்று நினைக்கிறேன். நாட்டுப் பற்றுக்கும், ஒரு அறி

வின் முதிர்ச்சியை ஆராய்ந்து பார்ப்பதற்கும் வேறுபாடுகள் உண்டு என்பதை தேவியார் அவர்கள் அறிவார்கள் என்று எனக்குத் தெரியும்! தேவி, நந்திமித்திரன் நம் அரண்மனையைச் சேர்ந்தவன் என்பது எள்ளாளருக்குத் தெரிந்தும், அவனால் அனுராதபுரத்துத் தமிழர்கள் தொல்லைபடுத்தப்படுகிறார்கள் என்பது புரிந்தும், அவனைத் தண்டிக்காமல் விட்டிருப்பது, எள்ளாளரது ராஜதந்திர அறிவின் முதிர்ச்சி என்பதை நீங்கள் எவ்வாறு மறுக்க முடியும்? முடியாது என்பதுவே உண்மையானால் நீங்கள், நான் ரோகணவின் எதிரி என்று எப்படிக் கூற முடியும்?" என்று கேட்டார் காசியபர். அவரது குரலில்கூட கொஞ்சம் கடுமை இருந்தது.

"புகழ்ச்சிக்குக்கூட அளவு இருக்கவேண்டும் என்று தான் தேவியார் கூறுகிறார்கள்" என்று குறுக்கிட்ட நந்திமித்திரன், "தேவி, எள்ளாளச் சோழப் பேரரசருடைய பண்பாடுகளை நான் என்றுமே எதிர்க்க மாட்டேன். எதிர்க்கவும் என்னால் இயலாது. அவரது ஆட்சியை எதிர்க்கிறேன். எதிரிலேயே எதிர்த்தேன்! உங்கள் வீரம் விலையாகிவிட்டதா என்றுகூட கேட்டேன்! என்றாலும், அப்போதும்கூட அவர் பண்பிலிருந்து வழுவாமல், வேளை வரட்டும்! என்றார் தேவி!" என்றான்.

"அப்படியா! நீ கைது செய்யப்பட்ட காரணம்?"

"அனுராதபுரத்து ஆட்சிக்கு ஆயிரம் உண்டு! ஆயினும், அன்று தளபதியின் தங்கை மகனுக்கு நான் அதிகமான அளவு கொடுமை விளைவித்துவிட்டேன். அதனால்தான்!"

"ஓகோ! தளபதியின் ஆத்திரத்தையே தூண்டி விட்டாயா?"

"ஆமாம் தேவி! தளபதிக்கும் எனக்கும் வாட்போர்கூட ஏற்பட்டது. தப்பியது அதிசயம்தான்!"

"யார், சோழத்தளபதியா?"

"இல்லை நான்தான்!"

என்றதும் விகாரதேவி வாயடைத்துப் போனாள்! எனினும், "பிறகெப்படித் தப்பினாய்?" என்று கேட்டு வைத்தாள்.

"மகிந்தமலைக் குகைக்குள் சென்று ஒளிந்து கொள்ளலாமென்று ஓடியபோது, மலையின் அடிவாரத்தில், குகையின் முன்பு சோழ வீரன் ஒருவன் இருந்திருக்கிறான். போறாதகாலம் தேவி, அந்த இடத்தில் குதிரையும் இடக்குச் செய்துவிட்டது. இமை மூடித் திறப்பதற்குள், அந்த வீரன், குதிரையின் முன்னங்காலைத் துண்டாடிவிட்டான்! பிறகு நேரடிப் போர் ஏற்பட வழியின்றி, நானேகூட நினைந்து பார்க்க முடியாத நேரத்துக்குள், என்னை இறுகக் கட்டிப் பிடித்துக்கொண்டுவிட்டான். நான் முண்டிக் கூட பார்க்க இயலவில்லை. கெட்டிக்காரன்தான் அவன்! அதற்குள்ளே தளபதியே அங்கு வந்துவிட்டான்!" என்றான் நந்தி. உடனே முதலமைச்சர், "அவ்விசாரணையில் உன்னைத் தண்டிக்க நிறைய காரணங்கள் கூறப்பட்டிருக்குமே" என்றார்.

"கூறப்பட்டது அமைச்சரே! தண்டிக்கவேண்டும் என்றுதான் அனைவரும் கூறினார்கள்! ஆனால், எள்ளாளர் என்ன சொன்னார் தெரியுமா? என்று கேட்டுவிட்டு, அங்கிருந்த அனைவர்மீதும் ஒருமுறை பார்வை செலுத்திவிட்டு, "நான் அவரது இராணுவத்தின் துணைத் தளபதி பதவியை ஏற்கவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்!" என்றான்.

பதறிப்போன விகாரதேவி "ஒப்புக்கொண்டதால் உன்னை விடுதலை செய்துவிட்டாரா? ஓடிப்போக அனுமதி கேட்கத்தான் இங்கே வந்திருக்கிறாயா?" என்றாள் பதட்டத்துடன்!

"நான் தமிழர்களுக்கு எதிராகவே இயங்குவதென்று எனக்குள் முடிவு செய்துகொண்டிருக்கிறேன் என்பதை உங்களுக்கு ஆயிரமாயிரம் முறை எடுத்துச் சொல்லிவிட்டேன்! ரோகணவின் குறுகிய எல்லையை, அகண்ட எல்லையாக்குவதற்குப் பேருதவி புரிவதாக வாக்களித்திருக்கிறேன். அது உங்கள் நினைவிலிருக்கிறதா தேவி?" என்று சற்று ஆத்திரமாகவே கேட்டான் நந்திமித்திரன்!

"நண்பா! நான் உன்னைப் புரிந்துகொண்டிருக்கும் அளவுக்கு என் அன்னை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. இப்போது கிடைத்திருக்கிற சந்தர்ப்பம், அதற்குப் பயன்படும்" என்று கூறிவிட்டு, தன் அன்னையைப் பார்த்து "அம்மா! நந்திமித்திரன் எனக்குக் கிடைத்த உயிர் நண்பன்! அதுபோலவே ரோகண நாட்டுக்கும் உயிர் நண்பன்! அவன் போய், எள்ளாளருக்கு அடங்கி நடப்பான் என்று எதிர்பார்க்கலாமா?" என்று கேட்டுவிட்டு, நீங்கள் முதலமைச்சருடன், அடுத்து நாம் செய்ய வேண்டுவனபற்றி கலந்துரையாடுங்கள். நாங்கள் கொஞ்சம் வெளியே போய் வருகிறோம்" என்று சொல்லி, பதிலைக்கூட எதிர்பாராமல் புறப்பட்டு விட்டான், நந்திமித்திரனை அழைத்துக்கொண்டு.

ஃ ஃ ஃ

தீசனது வரவை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்த காகவன தீசருக்கு லோகாயத விஷயங்களைப் பற்றிய எண்ணங்கள் மெள்ள பற்றிக்கொண்டன. மனிதனுடைய பிறப்புக்களில் ஏதேனும் ரகசியங்கள் இருக்கின்றனவா? எந்த ஒருவருடைய கட்டளைக் காகவேனும் மனிதன் பிறப்பெடுக்கிறானா? மனிதப் பிறப்புக்கள் எந்த ஒன்றினுடைய நிர்ப்பந்தத்தாலாவது நிகழ்கின்றதா? என்கிற முறையில் சிந்தனையோடத் தொடங்கியதும், அவருக்கே சிரிப்பு வந்துவிட்டது? "நான் எந்த உலகத்தில் இருக்கின்றேன்?" என்று வாய்விட்டு தனக்குத்தானே பேசிக் கொண்டார்!

அதனைக் கேட்டுக்கொண்டே அங்கே வந்து கொண்டிருந்த முதலமைச்சர் "நீங்கள் நலங் குன்றி இருக்கிறீர்களா அரசே?" என்று கேட்டார்.

"நீங்கள் இங்கே, இந்தச் சமயத்தில் வந்ததைப் பாராட்டுகிறேன். நான் நலமாகத்தான் இருக்கிறேன்; அமருங்கள் அமைச்சரே" என்று கூறியதும் காசியபர் ஒரு இருக்கையிலமர்ந்தார். அவர் அமர்ந்து கொண்டிருக்கும்போதே காகவன தீசர் "அமைச்சரே! மனிதப் பிறப்புக்களைப் பற்றி எண்ணிக்கொண்டேனா, எனக்கே சிரிப்பு வந்துவிட்டது. மனிதப் பிறப்புக்கள், எந்த ஒன்றினுடைய அல்லது எந்த ஒருவருடைய கட்டளைகளை நிறைவேற்றுவதற்காக நிகழ்கின்றன என்றும், அந்தப் பிறப்பில் ஏதேனும் இரகசியங்கள் புதைந்து கிடக்கின்றனவா என்றும் என்னையே நான் கேட்டுக்கொண்டேன்! நிதானமிழந்த இந்த உலகத்திலே நான் நிதானத்துடன் தான் இருக்கிறேனா? என்றெண்ணிக் கொண்டதும், அந்த எண்ணம் சொற்களாகி, உதட்டை விட்டு வெளிவந்துவிட்டன"—என்று நீண்டதொரு விளக்கம் கொடுத்தார், பின், "என்ன அமைச்சரே, என்

விளுக்கள் அல்லது சிந்தனைகள் பைத்தியக்காரத்தன மானதாக உங்களுக்குத் தோன்றுகிறதா?" என்றார் பரிதாபம் கலந்த குரலில்,

மன்னருக்கு இப்படிப்பட்ட எண்ணங்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் ஏற்படும்படியாக என்ன நடந்து விட்டது என்பதை முதலில் அறிந்துகொள்ள வேண்டும்போல இருந்தது காசியபருக்கு. என்றாலும் தன் விழைவை நேரடியாக வெளிப்படுத்தாமல், "அரசே! மக்கட் பிறப்புக்களைப் பற்றி நம் முன்னோர்களும் சரி, இன்றைய நமது தலைமுறையின் பேரறிவாளர்களும், சரி, எத்தனை எத்தனையோ உண்மைகளையும், விளக்கங்களையும் எடுத்துரைத்துக் கொண்டே வந்திருக்கிறார்கள். ஆனால் அரசே, அந்த விளக்கங்கள் அனைத்தும், எந்தெந்த சந்தர்ப்பத்தில், எத்தகைய சூழ்நிலைகளுக்கு ஏற்ப சொல்லப்பட்டனவோ, அவற்றிற்கு இயைய, புதியதொரு கருத்தினை அடக்கியே இருக்கின்றன. உதாரணத்துக்கு எடுத்துக்கொள்ளுங்கள்! இன்றைய உங்கள் மனோநிலை, சரியாக இருக்கவில்லை என்றே யூகிக்கிறேன். நான் தரவேண்டியிருக்கும் பதிலும், உங்கள் மனோநிலையில், கூறுகின்றவைகளை செரிமானம் செய்து கொள்ளத்தக்க முறையிலே இருக்கவேண்டுமல்லவா! அதுபோலத்தான் காலத்துக்குக் காலம் மனிதப் பிறப்புக்களும், அவற்றுக்கான காரணங்களும் மாறுபடுவதென்பது தவிர்க்க முடியாததாகும். ஒருவனுடைய பிறப்பு, அவனைத் தவிர்த்த வேறு இருவரது நிர்ப்பந்தத்தாலேயே தான் நிகழ முடியும்! நிகழ்ந்துகொண்டு மிருக்கிறது. ஆனால் அரசே, பிறந்த மனிதன் வளர்ந்து, வாழத் தொடங்குவதற்குள் புற உலகு பற்றி உணர்ந்து கொள்ளத் தொடங்கி விடுகிறான்; அல்லது உணர்த்துவிக்கப்பட்டு விடுகிறான். இசை பொதுவாக இனிய நாதத்தைத் தரக்கூடியதுதான். ஆனால், அதனை யாழின் மூலம் இசைக்கக் கேட்கும்போது ஒருவகை இன்பம்; வீணையின் மூலம் இசைக்கக் கேட்கும்போது இன்னொரு வகை இன்பம்! குழலின் மூலம் கேட்கும்போது வேறுவகை இன்பம்! வாய் பாட்டில் செவியுறும்போது மற்றோர்வகை இன்பம்! இதுபோல் தான். இசையானது கருவிகளில் மாறுபாடு கொண்டு நாதத்தை மாற்றிக் காட்டுவதுபோல, மனித அறிவுகளும் தாம் அமைந்து கொண்டிருக்கிற பலதரப்பட்ட சூழ்நிலைகளில் பக்குவப்பட்ட இயல்பிற்கு ஒப்ப மாறிக் காணப்படுகிறது.

அரசே! ஒருவன் தன் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எல்லாருக்குமே நல்லவனாக இருக்கிறான்; அதே வேளையில் இன்னொருவன், சிலருக்கு மட்டும் நல்லவனாகவும், வேறு சிலருக்குக் கொடுங்கோலனாகவும் இருக்கிறான். வேறொருவன், எல்லாச் சந்தர்ப்பங்களிலும், எல்லாருக்குமே நல்லவனாக இருப்பதுபோல் நடித்துவிட்டு, ஊரறியாமல், உலகறியாமல் உலகத்துக் கொடுமைகளின் கூட்டுச் சக்தியாக இயங்கிக்கொண்டிருக்கிறான். இன்னொருவன், மற்றொருவனிடம் சில சந்தர்ப்பங்மளில் மட்டும் நல்லவனாகவும், வேறு சில சமயங்களில் கொடுமைக்காரனாகவும் காட்சியளிக்கிறான்.

என்னைப் பொறுத்த வரையில் இதற்கான காரணங்களுக்கு மற்றொருவனை, அல்லது மற்றொரு சூழலை நொந்துகொள்ள மாட்டேன். அதேபோல் அறிவானது போதிக்கப்பட்ட பாங்கினையும் குறை சொல்ல மாட்டேன். எந்த ஒருவனுக்குமே, ஒரு குறிப்பிட்ட கால அளவுக்கும் வரம்புக்கும் உட்பட்டுத்தான் அறிவானது போதிக்கப்படுகிறது. ஒரு செடி நட்டுத் தண்ணீர் விடுவதுபோல. செடி மரமாக வளர்ந்த பின், பூமிக்குள் ஓடிக்கொண்டிருக்கும் நீரைத் தேடி, வேர் ஓடுவதுபோல, குறிப்பிட்ட அளவுக்கு வளர்த்துவிடப்படுகிற மனிதன், பிறகு தானே வளர வேண்டும்; தானே அறிவைத் தேடிக்கொள்ள வேண்டும்; தானே தனக்கு எத்தகை அறிவு தேவை என்பதைத்

THE INSTITUTE OF ENGLISH STUDIES

ஆங்கில இலக்கண இலக்கிய கல்விக்கழகம்
20, இராமநாதன் தெரு, தி.நகர், சென்னை-17.
(மாம்பலம் ரயில்வே ஸ்டேஷன் சமீபம்)

பெண்களுக்கு
தனி நேரமாக வகுப்புகள்
உண்டு

காலையிலோ அல்லது மாலையிலோ ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி
ஒரே வருடத்தில்
அடிப்படையிலிருந்து இலக்கண - இலக்கிய ரீதியாக
இங்கிலீஷ் நேரில் கற்கலாம்

புதிய வகுப்புகள் இப்பொழுது ஆரம்பமாகின்றன.....
உடனே சேருக

முக்கிய அறிவிப்பு: ★ 16 வயதிற்கு மேற்பட்டவர்களே இவ்வகுப்புகளில் அனுமதிக்கப்படுவர்... ★ தபால்மூலம் படிக்க விரும்புவோர் 20 பைசா தபால்தலையுடன் உடனே எழுதுக ......

முழு விவரங்கள் நேரில் G. சண்முகசுந்தரம முதல்வர்.

எங்கள் ஆங்கில மொழிப் பாடங்கள் வீட்டிற்கோர் நூல் நிலையம்...

தேடிக்கொள்ள வேண்டும். புறச் சூழ்நிலைகள் அனைத்தும், ஒரு மனிதன், தனக்குத் தேவையானவைகளைத் தேடிக்கொள்ளப் பயன்படுவனவே யொழிய, தேடிக் கொடுப்பன அல்ல.

அதனால் அரசே! எந்த ஒரு மனிதனும் வேறு இருவரது நிர்ப்பந்தத்தால் பிறப்பெடுத்தாலும், நிர்ப்பந்தித்தவர்களது கட்டளைகளுக்குக் கீழ்ப் படிந்து நடப்பது போன்ற ஒரு மாயத் தோற்றம்தான் இருக்கமுடியுமே தவிர, உண்மையில் அவனவன் தேடிக்கொண்ட அறிவின் வழியில்தான் இயங்குவான். அவ்வாறு இயங்கும்போதுதான் ஒருவனை நல்லவன் என்றோ, கொடியவன் என்றோ, மோசக்காரன், வஞ்சகன், பாவி என்றோ அழைக்கிறோம். அது போலவே பேரறிவாளன், ஞானி, கொடை வள்ளல் என்றும் மகுடம் புனைவிக்கிறோம்.

ஒரு மனிதனால், இன்னொரு மனிதன் இயக்குவிக்கப்படுகிறான் என்பதுகூட, அரசே, அந்த இருவரும் தங்களுக்குத் தாங்களே தேடிக்கொண்ட வழிமுறை அப்படி என்றுதான் என்னால் கூறமுடியும்.

நம்முடைய முன்னோர், ஒரு மனிதன் வேறொரு மனிதனது நலவாழ்வுக்காகவே வாழவேண்டும் என்றும், அதற்காகவே அவன் பிறப்பிக்கப்பட்டிருக்கிறான் எனவும் பன்னிப்பன்னிக் கூறியிருக்கிறார்களே! பரந்து விரிந்த இந்த ஞாலத்தில் எத்தனைப் பேர் தங்களை அப்படி ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள்?

மனிதனை மனிதன் வஞ்சிக்கின்றான்; தூஷிக்கின்றான்; கெடுக்கின்றான். வலிமை மிகுந்த ஒரு மனிதன், வலிமை குன்றிய இன்னொருவனது உயிரைப் பறித்துக் கொள்ளக்கூட தயாராகி விடுகிறான்! இவை அனைத்தும், பெற்ற அறிவின் குறைபாடு; அறிவைப் பெற அவன் தெரிந்தெடுத்துக் கொண்ட வழிமுறையின் குறைபாடு. இப்படித்தான் அரசே நான் கருதுகிறேன்" என்று கூறிவிட்டு சற்றே அமைதியானார்.

"பார்த்தீர்களா அமைச்சரே! நான் ஒரு சிறு வினாதானே கேட்டேன். அந்த வினாவுக்கு எவ்வளவு நீண்ட விளக்கம் தந்துவிட்டீர்கள்? அதுபோலத்தான் சிறிய உருவம் படைத்த ஒரு மனிதன், மிகப் பெரியதொரு பொருளுக்குக் கருவாக இருக்கிறான். அக்கரு, நீங்கள் குறிப்பிடுவதுபோல, நல்ல வழிமுறைகளுக்குரியதாகவும் இருக்கலாம்; வஞ்சித்து வாழ்வைக் குடிப்பனவாகவும் இருக்கலாம்! மொத்தத்தில் ஒரு விசித்திரமான—வேடிக்கையான பிராணிதானே மனிதன்!" என்று கூறிவிட்டு, "நான் ஏன் இன்று இப்படிப்பட்ட எண்ணங்களால் சூழ்ந்திருக்கிறேன் என்று நீங்கள் கேட்பீர்களானால் சிந்தனைக்கு மட்டும் புறச் சூழ்நிலைகள் காரணமாகிவிடுகின்றன என்றுதான் கூறமுடியும்.

நம்முடைய ரோகணரடா, இப்போது எங்கே, எப்படிப்பட்ட வழியில் போய்க் கொண்டிருக்கிறது என்று எண்ணத் தொடங்கினேன்! அந்த சிந்தனையின் விளைவுதான் இவ்வளவும்!

இந்தச் சிந்தனையைப்பற்றி, பகவான் புத்தர் "சிந்தனை யாருக்கு எழுகின்றதோ, அந்தச் சிந்தனை யாருக்கு அழிவற்றதாகவும் இருக்கிறதோ, அவர்கள், அந்தச் சிந்தனை அழிந்து, அழிவுக்குரிய மறு பிறப்பு மடையாத நிர்வாண நிலையடைகிறார்கள்! ஆனால் யாருக்கு சிந்தனை அழிந்து போகிறதோ, யாருக்கு சிந்தனையில் எழுச்சி ஏற்படாமல் சிதறிப்போகிறதோ, அவர்களுக்கு மீண்டும் சிந்தனை ஏற்படும்; அச்சிந்தனை அழிந்து போவதில்லை" என்று எடுத்துக் காட்டியிருக்கிறார். இதில் ஏதோ முரண்பாடுகள் இருக்கின்றனவோ, என்றுகூட நான் ஐயுறுகிறேன். இந்த என் ஐயத்துக்குக் காரணம், என் சிந்தனைகளே சிதறுண்டு போவதன் காரணமாகவுமிருக்கலாம். ஆனால் அமைச்சரே, சிந்தனைகள் என்பன எப்போதுமே இருவேறு திறத்தனவாகத்தானிருக்க முடியும் என்று நான் நினைக்கிறேன்.

எல்லாக் காலத்துக்கும், எல்லாருக்கும் பொருந்தக் கூடியதான முறையிலமைந்த சிந்தனைகள்; காலத்துக்கும் சூழலுக்கும் மட்டுமே ஒட்டி வரக்கூடிய சிந்தனைகள். இந்த இரண்டுக்குள்ளேயே அனைத்தும் அடக்கமாகிவிடுவதாக நம்புகிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் அமைச்சரே" என்றார்.

முதலமைச்சர் காசியபர், "மற்றவர்களது அபிப்பிராயங்கள் எப்போதுமே இன்னொருவருடைய அபிப்பிராயங்களை ஒட்டித்தான் இருக்கமுடியும்; இருக்க வேண்டும் என்றெல்லாம் கூற முடியாதல்லவா அரசே!" என்றார்.

"உண்மைதான்! பாருங்களேன்! நான் ரோகணுவில் முழு அமைதி, அகிம்சாபூர்வமான அமைதி வேண்டும் என்று தவியாய்த் தவிக்கிறேன்! இந்த என் தவிப்பு, மற்றவர்களிடம் இருக்க என்னால் நிர்ப்பந்திக்க முடியாதல்லவா!" என்று கேட்டு ஒரு புதிய திசையில் எண்ணங்களை ஓடவிட்டார்!

"அரசே, நீங்கள் எதைக் குறிப்பிடுகிறீர்கள்?" எனக் கேட்டார் காசியபர்!

"இந்த நாட்டைப்பற்றித்தான் குறிப்பிடுகிறேன் அமைச்சரே! அது கிடக்கட்டும், நான் எனது ஆட்சிக் காலத்தில் நாட்டு மக்களது அகவாழ்வு, என்றும் தூய்மையுடன் துலக்கம் பெற்றிருக்க வேண்டுமென்பதற்காக மேற்கொண்ட காரியங்களில் எதனைத் தாங்கள் தலையாயது எனக் கருதுகிறீர்கள்?" என்று காசியபரே எதிர்பாராத ஒரு வினாவைப் போட்டார்.

அந்த வினாவால் ஒருகணம் திகைத்துவிட்ட காசியபர், சட்டென்று சமாளித்துக்கொண்டு "மக்களது அகவாழ்க்கைத் தூய்மைக்கென்று நமது முன்னோர்கள் மேற்கொண்ட தலையாய காரியங்களைப் போலவே நாடுமுழுதும் பல பௌத்தவிகாரங்களையும், பௌத்த தூண்களையும் கட்டியிருக்கிறீர்கள். தீசமகாவிகாரை, சீதளபர்வதவிகாரை, கமிதவாலிவிகாரை, கூடாலிவிகாரை முதலானவைகள் அவற்றிலே தலைசிறந்தனவாக இன்றும், மக்களுக்கு பௌத்த நெறிகளையும், மும்மணிகள்

'நான்கு கண்கள், நான்கு காதுகள் ஒருவாய்'

மணமக்களுக்கு அறிவுரை என்று மேலே குறிப்பிட்ட வாசகங்கள் கூறப்பட்டது.

திருமணமானபின் மணமகன் இல்லாளின் கருத்துக்களோடு கலந்து வாழ வேண்டும் என்பதுடன் இதுவரை இரண்டு கண்களால் பார்த்தவர்கள் நான்கு கண் கொண்டு பார்க்கவேண்டும்; கேட்பதை இரண்டுகாதுகளால் மட்டும் கேட்டு முடிவெடுக்கக்கூடாது. நான்கு காதுகளாலும் கேட்டு முடிவெடுக்க வேண்டும். அப்போதுதான் இல்வாழ்க்கை சுவையாக இருக்கும் என்று கூறியதுமட்டுமல்லாமல் வாய்மட்டும் இரண்டாக இல்லாமல் ஒன்றாக வேண்டும் என்றார் சென்னையில் கலைஞர் முன்னிலையில் நடைபெற்ற ஒரு திருமணத்தில் தமிழ்க்காவலர் கீ. ஆ. பெ. விசுவநாதன்

தகவல்: C N. A. பாபு

பற்றியும், முச்சங்கங்கள் பற்றியும் நன்கு தெளிவாக எடுத்துரைத்துக் கொண்டு வருகின்றன. கலனாகிக் கொண்டு வந்த நூற்றுக்கணக்கான விகாரங்களையும், ஸ்தூபிகளையும் புதுப்பித்து புணருத்தாரணம் செய்திருக்கிறீர்கள்! அதைத்தானே அரசே, தாங்கள் குறிப்பிடுகிறீர்கள்?" என்றார்.

"உண்மைதான் அமைச்சரே! நம் முன்னோர்கள் காலத்திலிருந்து இன்று வரையில் இலங்கை முற்றும் பரவிக் கிடக்கின்ற ஆயிரக்கணக்கான விகாரங்கள், நாள்தோறும் நல்லறிவு நல்கிக் கொண்டிருந்தும், நாட்டு மக்கள் அத்துணைப் பேருமே நல்லவர்களாக ஆகிவிட்டார்கள் என்று நம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இது எதனால் என்று சொல்லமுடியுமா உங்களால்?" எனக் கேட்டார் அரசர்!

"அதைத்தான் முன்பே சொன்னேனே அரசே! நல்கப்படுகின்ற அறிவுரைகள் யாவும் ஒருவழியினைத் தெரிந்தெடுத்துக் கொள்வதற்காக மட்டுந்தான் என்று. தெரிந்தெடுத்துக் கொள்ளவில்லையானால், குற்றம் விகாரங்களைச் சாரமுடியாதே!"

'உண்மைதான்! வெகுநேரமாகப் பேசிக்கொண்டிருந்துவிட்டோம். தாங்கள் சென்று அப்புறம் வாருங்கள்" என்று சொல்லிக்கொண்டே எழுந்தார் காகவனதீசர்.

அரசர் எழுந்ததும், அமைச்சரும் எழுந்து விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டார். அமைச்சர் போனதும், அரசர் பணியாளை அழைக்கும் மணியை அடித்து, ஒருவனை அழைத்து, "இன்று பகல் அறுசுவை உண்டியுடன் உணவு தயாரிக்கச் சொல்! அத்துடன், அரசியிடம் போய், பகலுணவுக்கு, இளவரசர்கள் இருவர்களுடனும் வந்து, தன்உடன் அமர்ந்து உணவருந்த வேண்டும் என நான் கூறியதாகச் சொல்" என்று உத்திரவிட்டு விட்டு மஞ்சத்தில் சென்று அமர்ந்தார்.

ஃ ஃ ஃ

உணவு வேளை வந்தது இளவரசர்கள் கமணனும், தீசனும் விகாரதேவியும் உணவுக் கூடத்தில் குழுமினார்கள். அங்கே வந்த காகவன தீசர், அவர்கள் அனைவரையும் ஒருசேரக் கண்டு களித்தார்! அந்தக் களிப்பினை வெளிப்படையாகவே "தேவி, நாம் அனைவரும் ஒன்றாக இருந்து, உணவருந்தி பலகாலம் ஆகியிருக்கு மில்லையா?" என்று எடுத்துக் காட்டினார்.

அனைவரது இதயத்திலும் ஒரே நேரத்தில் குடும்பப் பாசம் முளைவிட்டது! "உண்மைதான் பிரபு! நம் தீசன்தான் அடிக்கடி கல்யாணிக்குச் சென்று தங்கிவிடுகிறான். கமணனோ காடு மேடுகளைச் சுற்றிக் கொண்டிருக்கிறான். நானோ அரசாங்கப் பணி, அரசாங்கப் பணி என்று அல்லாடிக் கொண்டிருக்கிறேன்" என்று கூறிவிட்டு, அனைவரையும் அமரச் செய்து, "இன்று நானே எல்லாருக்கும் உணவு பரிமாறப் போகிறேன்!" என்று கூறி, வேண்டிய ஆயத்தங்களில் ஈடுபட்டாள்.

பல்வேறு சுவையுடன் தயாரிக்கப்பட்டிருந்த உணவுப் பண்டங்களை யெல்லாம் கொண்டு வந்து ஒழுங்காக வைத்துவிட்டுச் சென்றான் சமையற்பிரிவின் தலைவன்.

அவைகளை யெல்லாம் எடுத்துப் பரிமாறத் தொடங்கினாள் விகாரதேவி. அதைக் கண்ட காகவன தீசர், "இரு தேவி, கமணன், தீசன் ஆகியோரது உணவுப் பங்கினை, மும்மூன்று கூறுகளாக்கித் தனித் தனியே வை" என்றார். வியப்புக்காளான விகாரதேவி, இன்று ஏதோ அதிசயம் நிகழ்த்தப் போகிறார் அரசர் என்ற எண்ணத்துடன், மக்கள் இருவரது உணவுப் பங்கினையும் தனித்தனியே மூன்று மூன்று கூறுகளாக்கி வைத்தாள்.

ஒரு பக்கம், அரசரும் அரசியும் அமர்ந்துகொண்டனர். எதிர்த் திசையில் கமணனும், தீசனும் உட்கார வைக்கப்பட்டனர்.

அரசர், விகாரதேவியைப் பார்த்து, "தேவி, இருவரது உணவினையும் கூறுகளாக்கி வைத்துவிட்டு என்ன நிகழப் போகிறது என்று அறிய விரும்பி நிற்கிறாய் அல்லவா! பார். அற்புதம் நிகழப் போகிறது" என்று கூறிவிட்டு, சகோதரர்கள் இருவரையும் பார்த்து, "குழந்தைகளே! நாமும், நமது குடும்பத்தினரும் என்றென்றும் பௌத்த மார்க்கத்தைப் பின்பற்றுபவர்கள். அதன் காரணமாகவே என்றும் பௌத்த தேரர்களையும், பௌத்த பிக்குகளையும் பெரும் சிறப்புக் கொடுத்து புரந்து வருகிறோம். இனியும் அப்படியே பௌத்த நெறி தவறாது இருப்போம் என்றும், பௌத்த பிக்குகளுக்கு மாறாக என்றும் நடந்துகொள்ள மாட்டோம் என்றும் கூறி, இந்த முதல் கூறு உணவைச் சாப்பிடுங்கள்" என்றார்.

அதைக் கேட்ட விகாரதேவி, தனக்குள் சிரித்துக் கொண்டாள், ஆனால் மறுமொழி எதுவும் கூறவில்லை. சகோதரர்கள் இருவரும் ஒரு கூறை எடுத்து, அதில் ஒரு கவளச் சோற்றை பிக்குகளுக்கு என்று ஒதுக்கி வைத்துவிட்டு "வருங் காலத்தில் என்றும் நாங்கள் பௌத்த பிக்குகளுக்கு எதிராக நடந்து கொள்ள மாட்டோம்" என்று கூறிவிட்டுச் சாப்பிட்டனர்.

உடனே மன்னர், அடுத்த கூறு உணவை எடுத்து அவர்கள் முன்வைத்து "சகோதரர்களாகிய நாங்கள், எந்தக் காலத்திலும், எந்தக் காரணத்துக்காகவும் மன வேறுபாடு கொண்டு விரோதம் கொள்ளமாட்டோம் என்று கூறி இதனைச் சாப்பிடுங்கள்" என்றார்.

கமணனும், தீசனும் அவ்வாறே கூறி சாப்பிட்ட பின்பு, அரசர் மூன்றாவது கூறினை எடுத்து வைத்து, "தமிழர்களுக்கு எதிராக என்றும் போரிடமாட்டோம் என்று கூறி இதனைச் சாப்பிடுங்கள்" என்றார்.

அது கேட்ட விகாரதேவியின் கண்கள் ஒரு விநாடியில் கன்றிச் சிவந்துவிட்டன. பரிமாறப்பட்டிருந்த உணவை உதைத்துத் தள்ளிவிட்டு எழுந்து நின்றாள்.

அதே சமயம், தீசனும், கமணனும் தங்கள் தங்கள் உணவுத் தட்டுக்களையும் தூக்கி தூர எறிந்துவிட்டு, ஆத்திரம் கொண்டவர்களாய், "எங்கள் தந்தை ஒரு சரியான ஆண்மகனா யிருந்தால், எங்களிடம் இந்த வாக்குறுதியைக் கேட்கமாட்டார்" என்று கூறிவிட்டு அவ்விடம் விட்டகன்றனர். அவர்களைத் தொடர்ந்து விகாரதேவியும் புறப்பட்டாள்.

சோழதேவியிடமிருந்து வந்த ஓலையில், கண்டபடி, ஒரு போரினைத் தடுக்க தான் மேற்கொண்ட இந்த முயற்சி தோல்வியடைந்துவிட்டதே என்று எண்ணி, பிரமையடைந்தவராய், அவரும் அரைகுறை உணவோடுஎழுந்து தன்இருக்கை சேர்ந்தார். பலதரப்பட்ட எண்ணங்கள் அவரை ஆட்டிப்படைக்கத் தொடங்கின.

வேலை, போச்சு!

அவர் எழுதிக்கொடுத்தார், விசாலாட்சி விவாகம், என்று.

நான், விசாலாட்சி விவாதம் என்று அச்சுக்கோர்த்தேன்! தூக்கவேலை, கொஞ்சம் துக்கமுங்கூடத்தான். எனவே, தவறுமேல் தவறுகி விட்டது.

சாமி காவடியானந்தர், என்று தெளிவாகத்தான் அவர் எழுதினார். நானே அதை,

காமி சாவடியானந்தர் என்று பிழையுடன் அச்சிட்டேன். அது போலவே,

காகமாலை
காமாலை
மணி அரசு
பிணி அரசு
விசாலம்
விசாரம்
வேதம்
பேதம்
மொய்
பொய்

என்று பல பிழைகள் ஏற்பட்டு விட்டன, என் அஜாக்ரதையினால். துண்டு விஷயந்தான் இவ்வளவுக்கும். அதிலும், எங்கள் ஆசிரியர் மணி மணியாக எழுதுவார்—அதாவது எழுத்துக் கோர்வையாக, அச்சுப் போலவே இருக்கும். விஷயம், இருக்கட்டும், அதுதானு முக்கியம்! அவருக்குப் பக்கம் பக்கமாக எழுதவேண்டிய வேலை கிடையாது. சுருங்கக் கூறுவதே சூட்சமம் என்பது அவருடைய இலட்சியம்! பத்திரிகையின் பக்கங்கள், பேனுவின் தயவினுலே அல்ல, காரியாலயக் கத்திரிக்கோலின் கருணையால், அழகாக இருக்கும்.

சிறுகதை!

உலக நடப்புக்கள் எப்படி இருக்கின்றன என்பதற்குக் கட்டுரை எழுதித்தான் காட்டவேண்டுமென்பதில்லை. கதை எழுதிக்கூடப் புரிய வைக்க முடியும் என்பதை விளக்குவதுதான் 17-2-1946இல் "திராவிட நாடு" இதழில் வெளியான இந்தக் கதை.

"தம்பீ! இது ஒரு பிரபல திருமணம். அழகாக அச்சிட்டு, இந்த விலாசத்துக்கு ஐம்பது பிரதிகள் அனுப்பிவைக்கவேண்டும், தெரிகிறதா" என்று கூறித் தாளைக் கொடுத்தார். நாளை மறுநாள் வருகிறேன் என்று துணை ஆசிரியருக்குக் கூறினர்; துரிதமாக வெளியே சென்றூர். தீபாராதனைக்குக் கற்பூரம் சரியாகக் கிடைக்காது கஷ்டப்பட்ட பக்தர்களின் தூதுக் கோஷ்டி, அன்று கலெக்டர் பிரவுன்துரையைக் காணப் புறப்பட்டது. அவர், ஒரு கிராம வைத்தியசாலைத் திறப்பு விழாவுக்குச் சென்றிருந்தார், அந்தக் கிராமத்துக்குக் கிளம்பிற்று தூதுக் கோஷ்டி. எங்கள் ஆசிரியர், அந்தத் தூதுக்கோஷ்டிக்குத் தலைவர்! பெயரும் பொருத்சுந்தான். அனுமந்தராவ்! அவருடைய திருநாமம்! சில சமயம் வீட்டிலே அவர் சிரமப்படுவதுண்டு, தன் மனைவியைப் பெயரிட்டு அழைக்க. அம்மையாருக்குச் சீதாலட்சுமி என்று பெயர் இருந்தது!! ஆமாம், இவ்வளவு கூறின நான், பத்திரிக்கையின் பெயரைக் கூறவில்லையே; பாருங்கள் அவ்வளவு மறதி எனக்கு! "வியாசர்" எங்கள் பத்திரிகையின் பெயர்.

"வியாசர்" பத்திரிகை ஆசிரியர் அனுமந்தராவ், தன் பாரியை சீதாலட்சுமியிடம் விடை பெற்றுக் கொண்டு, துணை ஆசிரியர் கருடாழ்வார் முதலியாரை நிர்வாகத்தைக் கவனிக்கும் பொறுப்பிலமர்த்தியதும், கிண்டிக் குதிரைப் பந்தயத்திலே அந்தக் கிழமை ஓடும், அசுவ இலட்சண விளக்கப் புத்தகத்திலே அவர் ஈடுபட்டு, ஆசிரியர் தந்த செய்தியை நான் அவசரத்திலே, அச்சுப் பிழையுடன் செய்து கொடுத்தபோது, "ஏண்டா! தம்பீ! (என்ன எல்லோரும் தம்பி, தம்பி என்று கூப்பிடுகிறூர்களே இவன் சிறு பயலோ என்று சந்தேகிக்காதீர்கள். எனக்கு வயது 40. என் பெயர் தம்பி முதலியார்!) சரியாகத்தானே செய்தாய்?" என்று கேட்டுவிட்டு, ஒருமுறை ஒப்புக்கு அதைப் பார்த்து "சரி, போடு!" என்றூர். மெஷின், அந்த அபத்

அறிஞர் அண்ணு

தத்தை ஏற்க மறுக்குமா என்ன! அச்சுப் பிழைமட்டுமா அது எவ்வளவோ, கருத்துக் கோளாறுகளைத் தாங்கித் தாங்கி, உரம் பெற்றதாயிற்றே; அது மளமளவென்று அடித்துத் தள்ளிவிட்டது. பொழுது பலபலவென விடிந்ததும், பத்திரிகையைப் பார்சல் செய்யும் வேலை மடமடவென்று நடந்தது.

இரண்டாம்நாள் இரவு, தடதடவென்று கதவைத் தட்டினான் ஆபீஸ் பையன். திறந்தேன், திடுக்கிட்டேன்; அவசர அழைப்பு ஆசிரியரிடமிருந்து. ஓடினேன், கிடுகிடுவென்று!

"தம்பீ! தலையிலே கல்போட்டாயே!" என்றார் ஆசிரியர் அனுமந்தராவ். கருடாழ்வாரைக் காணோம் பத்திரிகைக்கு அவர் கொடுத்த தாளை எடுத்துவரச் சொன்னார். கொண்டு வந்தேன், படி என்றார், படித்தேன். அது இது.

பிரபல திருமணம்

பலசரக்கு கடையின்றிப் பிரபஞ்சம் நிலைக்குமா? முடியாது! நமது ஊரிலே, பலசரக்குக் கடைகள் பல இருந்தாலும், பண்டரி விலாஸ் கடைக்கு ஈடாகுமா? ஆகாது! அந்தக் கடைக்கு மூடிசூடா மன்னராக விளங்கும், முகுந்தராஜ முதலியாரின் மூத்தகுமாரி, சௌபாக்கியவதி விசாலாட்சி அம்மாளின் விவாகம், விமரிசையாக இன்று காலை நடைபெற்றது. மணமகன் மணி அரசு முதலியார், ஜெக ஜோதியான வைரக் கடுக்கன்கள் அணிந்து காட்சி அளித்தார். ஸ்ரீமதி விசாலம் புதிய காசுமாலையுடன் காட்சி தந்தது, கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. ஸ்ரீமான் முதலியாரின், வைதிக சிரத்தையை அறிந்த பிராமண சிரேஷ்டர்கள், காலையிலே, வேதம் ஓதினர்! இது புதிய முறையல்ல, பழைய ராஜாக்கள் காலத்திலே இதுவே சம்பிரதாயம்! மாங்கலியதாரணம், முதலிய சர்வ சம்பிரதாயக் காரியங்களும் இனிது நிறைவேறிய பிறகு, உள்ளூர் வெளியூர்ச் சீமான்கள், மொய் எழுதினர். மாலையிலே அருமையான சங்கீதக் கச்சேரி நடைபெற்றது. ஆனால் ஒருவிஷயம் இங்கு குறிப்பிடவேண்டி இருக்கிறது. சங்கீதம், சாஸ்திரோக்தமாக இல்லை, அது என்னமோ தமிழ் இசை என்று சிலர் கூறுகிறார்களே, அதுவாம் அது. ஊர்வலம் நடைபெற்றது. ஊரெங்கும் இதே பேச்சு, இவ்வளவுக்கும் சிகரம் வைத்ததுபோல இருந்தது, காலையும் மாலையும் கலியாணத்துக்குச் சாமி காவடியானந்தர் விஜயம் செய்தது. அவர் நமது ஆசிரியர் அனுமந்தராவிடம் அன்யோன்யமாகப் பேசியது கண்டு, "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" என்று பலர்கூறினர். முகஸ்துதியில் பிரியமில்லாத நமது ஆசிரியர், அந்தப் புகழுரையைக் கேட்டும் கேட்காதவர் போலிருந்தது, குறிப்பிடத்தக்கது.

இதுதான் ஆசிரியர் தந்தது. இதிலேதான், விசாலம் விசாரமாகி, விவாகம் விவாதமாகி, சாமி காவடியானந்தர் காமி சாவடியானந்தராகி, காசுமாலை காமாலையாகி, மணி அரசு பிணி அரசாகி, வேதம் பேதம் என்றாகி, மொய் பொய் என்றாகி வெளிவந்தது. எல்லாம் அச்சுப் பிழைதான், ஆனால் ஆசிரியர் அனுமந்தராவ், "தம்பீ! என் வாழ்க்கையையே வதைத்துவிட்டாய்' என்று போட்ட கூச்சல், உண்மையாகவே, நான் செய்த பிழை மிக மிகக் கொடுமையானது என்று உணர்த்திற்று. உரத்தக் குரலிலே கூறிவிட்டார். "உன் கணக்குத் தீர்த்தாகிவிட்டது. வேலைக்கு வேண்டாம் இனி, போ வெளியே" என்றார் வெளியே சென்றேன், வேறென்ன செய்ய முடியும்! ஒரு துண்டு விஷயத்தை இவ்வளவு பிழைகளுடன் வெளியிட்டால், அச்சுக் கோர்ப்பவனுக்குஅச்சகத்திலே, அலுவல் கிடைக்கத்தான் செய்யாது. என்ன செய்வது! ஏக்கம் கொண்டேன். தூக்கம் வரவில்லை. போக்கிடமின்றித் தவித்தேன்.

வேலை இல்லை என்ற உடனே வேலாத்தா-என் மனைவிக்குக் குலதெய்வத்தின் பெயரையே வைத்துவிட்டார்கள்—கொண்ட கோபம் இருக்கிறதே, இவ்வளவு அவ்வளவு என்று சொல்லி முடியாது. "ஒரு நாளைக்கு, ஒருவேளை, சோத்திலே, தப்பித் தவறி ஒரு கல் இருந்துவிட்டா, என்னா கோபம் வருது உங்களுக்கு. இத்தனை காலமா அச்சாபீசு வேலையிலே இருக்கறீங்க, எவன் கொடுப்பான்வேலை?" என்று பேசினாள். பேசினாள் என்று ஒப்புக்குச் சொல்றேன், அவ போட்ட கூச்சல் இருக்கே, வேலாத்தாளே (குலதெய்வம்) வந்தது போலிருந்தது. என்னால் வேதனையைத் தாங்க முடியவில்லை. சே! குடும்பமும் வேண்டாம், இந்தக்குத்தல் குடைச்சலும் வேண்டாம். பேசாமே சன்யாசி ஆகிவிட வேண்டியதுதான் என்று தீர்மானித்து, வேகமாக வீட்டை விட்டு வெளியேறினேன். நடந்துகொண்டே யோசித்தேன், வேலாத்தாபோல, ஊரிலே எத்தனையோ அம்மணிகள் இருப்பார்களே, அவர்களிடந்தானே போய் பிச்சை கேட்கணும், "தடியனுட்டம் இருந்துகொண்டு, பிச்சை எடுக்க வந்துவிட்டயா!" என்று ஏசுவார்களே, என்ற பயம் பிறந்தது, சரி, நிசமாகவே சன்யாசி ஆகவேண்டியதில்லை, ஒருநாளைக்காவது, வீட்டுக்குப் போகாமலிருப்போம், வேலாத்தா "என்னமோ ஏதோ" என்று அழட்டும் என்று எண்ணினேன். எங்கெங்கோ சுற்றிவிட்டு, இரவு பத்துமணி சுமாருக்கு ஊர்க்கோடிச் சாவடியிலே போய்ப் படுத்தேன், அரைத்தூக்கம். அந்தச் சமயத்திலே, "நமச்சிவாயம்!" என்று சத்தம்கேட்டது, சாவடிக்கு சாமி காவடியானந்தர் வந்தார். நான் படுத்திருந்த மூலையிலிருந்து எழுந்திருக்கவுமில்லை, பேச்சுக்குர

பாவை வளர்கிறாள்!

— ந. சௌந்தரராசன் —

பருவ எழில் பூத்து ஒரு
பாவை வளர்கிறாள்;
திருமலரப் பசுமை ஏற்று
திரண்டு வளர்கிறாள்!

சிறுமணிகள் பால் பிடிக்க
செழித்து வளர்கிறாள்;
நறுமணத்தை உழவர் வீட்டில்
நாட்ட வளர்கிறாள்!

களையெடுத்த காரிகைகள்
கையில் தவழவே,
கலை மணக்க கவின் அமைத்துக்
கனன்று வளர்கிறாள்!

காற்றடித்த திசை தோறும்
சாய்ந்து வளர்கிறாள்;
சேற்றுடைத்த வயல் தோறும்
சேர்ந்து வளர்கிறாள்!

புன்னகையில் அகம் மலரப்
பூத்து வளர்கிறாள்;
பொன்மணிகள் தலையி லேற்றுப்
பொதிந்து வளர்கிறாள்!

நெற்பயிராள் நேர்ந்த நல்ல
தலைவி வளர்கிறாள்;
சுற்றியுள்ள பசுமைக் குள்ளே
சுழன்று வளர்கிறாள்!

அன்றலர்ந்த மலர் மணத்தை
அள்ளித் தருகவே
நன்றலர்ந்த குலம் வாழ
நாடி வளர்கிறாள்!

லும் கொடுக்கவில்லை, நல்ல வேளையாக அவர் என்னைப் பார்க்கவில்லை. பார்த்துவிட்டால் என்ன செய்வது என்ற திகில் எனக்கு. அடே பயலே! நீதானே, என்னை, காமி சாவடியானந்தர் என்று அச்சடித்தது' என்று கேட்டு ஏதாவது மந்திரம் போட்டு விட்டால் என்கதி என்னஆகும்! நானோபிள்ளைகுட்டிக்காரன்! வாய் திறவாமல் சுருட்டிப் படுத்துக்கொண்டிருந்தேன்.

“ஏன்சாமி!” என்று வேறோர் குரலும் கேட்டது. நான். ‘சாமியார், நமசிவாயம்’ என்று சொன்னதும், ஆண்டவன் பெயரைச் சொல்கிறார் என்று நினைத்துக்கொண்டேன். அது ஒரு ஆசாமியினுடைய பெயர் என்று அப்போதுதான் தெரிந்தது. அவனும் சாமியாரும் ஏதேதோ பேசிவிட்டு, அந்தக் கலியாணப் பேச்சையே ஆரம்பித்துவிட்டனர். எனக்குப் “பகீர்” என்றாகிவிட்டது, சரி, நம்மைத்தான் திட்டப் போகிறார்கள் என்ற நினைப்பிலே. அதற்குத் தகுந்தாப்போல, “யாரு சாமி! பேப்பரிலே, எழுதினவன், தாறுமாறாக?” என்று வேறு நமசிவாயம் கேட்டுத் தொலைத்தான். சாமியார் சிரித்து விட்டு, எழுதினவன் பேரில் தவறு இல்லை. அவனிடம் இருக்கிற கம்பாசிட்டர் ஒரு குருட்டுப் பயல் போலிருக்கு, அவன் அச்சுக் கோர்த்தபோது, தப்பும் தவறுமாகச் செய்து விட்டான்” என்றார் சாமியார். “சிரிக்கிறீரே சாமி! அந்தப் பயல் செய்த காரியத்துக்கு. என் எதிரே கிடைத்தானானா......” என்றான் நமசிவாயம். ஐயோ! வேலாத்தாளின் கோபமே, பரவாயில்லையே, அடி பட்டாலும் வசவு கேட்டாலும், நம்ம மனைவிதானே என்ற சமாதானமாவது இருக்கும், இந்தப் பயல் யாரோ. வழியே போகிறவன், இவனல்லவா ‘கறுவுகிறான்’ என்றுதோன்றிற்று. என்ன செய்வது, இடபேதம்! பேசாமல் கிடந்தேன். சாமியார் என் பக்கம் பரிந்து பேசலானார்! “அவன்செய்த தவறிலே கூட எவ்வளவோ உண்மை இருக்கிறது நமசிவாயம். உண்மையைச் சொல்ல வேணுமானா, நான், காவடி கைங்கரியம் நடத்தி இந்தச் சாவடியைக் கட்டிச், சாமி காவடியானந்தர் என்று பெயரெடுத்தேன். அந்தக் கம்பாசிட்டர் கை தவறுதலாக, காமி சாவடியானந்தர் என்றுஅச்சடித்து விட்டான். அது ஒன்று தவிர, மற்றது, பெரும்பாலும், உண்மையேதான்!” என்றார். எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. நமசிவாயத்துக்கும் அப்படித்தானே இருந்திருக்கும். நான்பேச முடியாத நிலை. அவனுக்கென்ன பயம், பேசினான், கோபமாகவே, “வேடிக்கை பேசுகிறீர் சாமியாரே! அந்த முட்டாள், விசாலாட்சி விவாகம், என்பதை, விவாதம் என்று அச்சடித்திருக்கிறான், அவனுக்குப் பரிந்து பேசுகிறீர்களே! என்று கேட்டான். முட்டாளாம், நான்! என்ன செய்யலாம்! அவளும் அதையேதான் வேறே பாஷையிலே சொன்னாள். “உங்க புத்தி இருக்கே, உலக்கைக் கொழுந்து” என்று சொன்னாள், கோபம் வந்தது எனக்கு. இவன் என்னை முட்டாள் என்று அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறான். போறாதகாலம். சாமியார், “நமசிவாயம்! விவாகம் என்று அச்சடிப்பதை விட, விவாதம் என்று அச்சு அடித்ததுதான் பொருத்தம், ஏனென்றால், இந்தக் கலியாணம், விசாலாட்சிக்குக் கொஞ்சம் கூட இஷ்டம் கிடையாது. அவள் தாயாரிடம் இதுபற்றி விவாதித்தாள், புத்தி சொல்லப்போன என்னிடம் கூட விவாதித்தாள். ஆகவே, விவாகம் என்பதை விவாதம் என்று அச்சடித்தது, உண்மை, அவனுடைய கை தவறுதலாலே, வெளிவந்தது என்றுதான் அர்த்தம்.” என்றார். “ஏன் விசாலாட்சிக்கு இஷ்டம் இல்லை? என்று கேட்டான் நமசிவாயம். சாமியார் கேட்டார், ‘மாப்பிள்ளை பெயர் என்ன?’, என்று. “மணிஅரசு” என்றான் நமசிவாயம். அதைத்தானே அந்தப்பயல் “பிணி அரசு” என்றுஅச்சடித்தான் என்று கேட்டார் சாமியார். அதற்காகத்தான் அந்தப் பிரகஸ்பதியைப் பாராட்டுகிறீரா? என்று நமசிவாயம் கேட்டான். சாமியார் ‘அவன் கை தவறி, மணி அரசு என்பதை பிணி அரசு என்று அச்சுக் கோர்த்தான். ஆனால் தெரிந்தே அப்படி அச்சடித்தாலும் தவறு இல்லை. ஏனென்றால் உண்மையிலேயே மாப்பிள்ளை நோயாளிதான், அவனுக்குக் காமாலை வியாதி' என்றார் சாமியார். நான் பூரித்துப்போனேன். “நோயாளியை மணம் செய்து கொள்ளும் பெண்ணின் பெயர் விசாலம் என்று இருந்தால் என்ன, அவன் தவறாக அச்சடித்தானே விசாரம் என்று, அதுதான் பொருத்தம்” என்று சாமியார் கூறினார். நமசிவாயத்தின் வாய் அடங்கிவிட்டது. எனக்கோ துடிதுடிப்பு! எழுந்துபோய்ச் சாமியார் காலிலே விழவேண்டும் என்று. அடக்கிக்கொண்டு படுத்திருந்தேன். “யோசிக்கப் போனால் அந்தக் கம்பாசிட்டர் செய்தது ஒன்று கூடத்தவறு கிடையாது. “காசு மாலை மாப்பிள்ளை போட்டது, அவன் காமாலைக்காரன், ஆகவே காசு மாலை என்று அச்சிடாமல், காமாலை என்று அச்சிட்டதிலே எழுத்திலே பிழையே தவிர உண்மையிலே, பிழையல்ல. வேதம் என்பதை பேதம்என்று அச்சடித்தான். வேதம் உண்மையிலேயே, ஜாதி குலம் முதலிய பேதத்தை ஏற்படுத்தத் தோன்றியதே. அது மட்டுமில்லை. அன்று வேதம் ஓதினார்களே பார்ப்பனர்கள், அவர்கள் ஓதியது, சரியான வேதமல்ல, ரொம்ப ரொம்பப் பேதம் இருந்தது, அந்த அரைகுறை ஆசாமிகளின் வேத பாராயணத்திலே, மொய், எழுதினாரே; அதிலே பெரும்பகுதி பொய்தான். வெறும் கௌரவத்துக்காக,

---

செய்யடா செய்!

— கருமலைத் தமிழாழன் —

செய்யடா செய்—இன்றே
செய்யடா செய்!

மழலை மொழி குழவிக்கே
மகிழ்வுடனே பெயர் சூட்டும்
பொழுதினிலே தூயதமிழ்
பெயரினையே சூட்டிடவே
—செய்யடா

குழவிகளும் வளர்ந்துவர
குலயிறைவன் என்றுமூட
வழக்குகளை அவர்களிடம்
வளர்த்திடாமல் கருத்தாக
—செய்

பிஞ்சுமனம் பற்றிடவே
பள்ளியிலே சாதியெனும்
நஞ்சினையே சேர்த்துதரும்
நலிவுகளை நீக்கிடவே —செய்

பல்லுபோன கிழவிகளும்
பேரனையே அருகழைத்து
சொல்லுகின்ற புராணங்கள்
சொல்லாமல் அவர்களினை
—செய்

பச்சிளமை மனதினிலே
பயம்பற்ற பெற்றோர்கள்
அச்சத்தை காட்டுகின்ற
அச்செயல்கள் மாற்றிடவே
—செய்

சிறுபிள்ளை உன்னாலே
இச்செயலா காதென்னும்
பொறுப்பற்ற சொற்களினை
பொழிவதினை விட்டுவிட
—செய்!

எந்தெந்த ஊரிலிருந்தோ யாரா ரோ, ஐம்பதும் நூறும் மொய் அனுப்பினதாகப் பொய் சொன்னார், ஆகையால், மொய் என்பதற்குப் பதில் பொய் என்றுஅச்சடித்ததும் சரியே!" என்றார் சாமியார். நமசிவாயத்தின் கோபம், என்மீது இருந்தது போய்விட்டது, முகுந்த ராஜ முதலியார்மீது பாய்ந்தது. "பெண்ணை, ஒரு நோயாளிக்கா கலியாணம் செய்து கொடுத்தான் பாவம்! அந்தப்பெண் வேண்டாமென்று மறுத்துமா அதன் தலையிலே அந்தக் காமாலைக்காரனைக் கட்டிவைத்தான்" என்று நமசிவாயம் ஏசலானான். "இப்படிப் பட்ட தவறுகள் நடைபெறுவதை, அனுமதிக்கிறோம், ஆசீர்வாதம் செய்கிறோம், அவர் இஷ்டம் என்று கூறுகிறோம். அதனதன் விதிஎன்று கூறுகிறோம். இரண்டு பேருடைய வாழ்க்கையை அந்த ஒரு ஆசாமி தன் இஷ்டத்துக்கு ஏற்றபடி வளைத்துவிட்டான். அதைத் திருத்தவும் முடியாது, கண்டிப்பதும் கூடாது. பாவம்! அந்தக் கம்பாசிட்டர், என்னமோ கை தவறித் தப்பாக அச்சுக் கோர்த்து விட்டான், அவனை நான் மடையன் குருடன் என்றெல்லாம் திட்டினேன். விஷயத்தைப் பார்க்கப்போனா அவன் கைக்குத் தங்கத் தோடா அல்லவா போடனும் போலஇருக்கு" என்று கூறினான்நமசிவாயம்எனக்குஆனந்தம்! அவன் தங்கத்தோடா கூடப் போடத் தேவையில்லை, அவன் சொன்ன வார்த்தை, வைரத் தோடா போலே இருந்தது, என் மனது குளிர்ந்தது. பிறகு, வேறு ஏதோ தேவாரம் திருவாசகம் முதலிய சத் விஷயங்களைப் பேசிவிட்டு, நமசிவாயம் விடைபெற்றுக் கொண்டு போனான். எனக்கு, இனியாவது எழுந்திருந்து போய்ச் சாமி காலிலே விழுந்து கும்பிடுவோமா என்ற எண்ணம் உண்டாயிற்று, ஆனால் ஒருபயம் இருந்தது. நான் செய்த எல்லாத் தவறுகளுக்கும் சாமியாரே சமாதானம் சொல்லி விட்டார்; ஆனால் நானே சாமியாரையே, காமி சாவடியானந்தர் என்றல்லவா......

காமி சாவடியானந்தருக்கும் தூக்கம் வரவில்லை. படுத்துக் கொண்டே பாடிக்கொண்டிருந்தார். பனிரண்டுமணி சுமாருக்கு, யாரோ வரும் சத்தம்!

ஏது பாட்டு, பலே ஜோரா இருக்குதே" என்று ஒரு குரல் கேட்டது. திடுக்கிட்டுப் போனேன். பெண் குரல்! பேசியது பச்சை! எனக்குத் தெரிந்தவள்!! பலசரக்குக் கடையைக் கூட்டி மெழுகிச் சுத்தம் செய்பவள். அவள் வருகிறாள், சாவடிக்கு நடுநிசியில்! காமி சாவடியானந்தனேதான் இவன்! இதிலே கூட நான் அச்சடித்ததிலே என்ன தவறு? செச்சே! அதற்கு மேலே, அங்கே நடந்த பேச்சை நான் எப்படிச் சொல்ல முடியும். சாமியாராம்! காவடியானந்தராம்! காமி, சாவடியிலே ஆனந்தராக இருந்தார். தேவாரமா பாடினார்! தில்லானா பாடினார்! பச்சை, சாமியாரிடம் விபூதிப் பிரசாதமா கேட்டாள், 'எடு, எடு! பணத்தை! ஏழுநாளா ஏச்சிக்கிட்டே வர்ரயே" என்றாள். விபூதிப்பையிலே இருந்து கலகலவென்று ரூபாயைக் கொட்டினான் அந்தக் காமி. ஐந்து ரூபாயைக் கொடுத்தான் பச்சையிடம்.

"மிச்சத்தை இப்படிப் போடு சாமி" என்று கூறிக்கொண்டே நான் போய் நின்றேன் பக்கத்திலே. அலறிப்போனான் அந்த ஆண்டி. அவளும் ஆந்தைபோல விழித்தாள். சாமியாரை நான் பேசவிடவில்லை. 'மகா யோக்யர்போல, நான் செய்த மற்றத் தப்பெல்லாம் சரி என்று நமசிவாயத்துக்குச் சொன்னயே, உன் பெயரை, சாமி காவடியானந்தர் என்று அச்சடிக்கணும், காமி சாவடியானந்தர் தானே நீ" என்று கேட்டேன். ஆசாமி கைப்பிடியாக அகப்பட்ட பிறகு, பயமென்ன. பயம் போய் விடவே, புத்தியும் கொஞ்சம் தீட்சணியமாக வேலை செய்ய ஆரம்பித்தது, "கைதவறி, மாற்றி மாற்றி அச்சடித்தேன் என்று தானே சொன்னே, தவறிச் செய்ததில்லை, சகல விஷயமும் தெரிந்து தான் அச்சடித்தேன். மரியாதையா, பணத்தைப் போடு" என்றேன். என்னடா இது, கொள்ளை அல்லவா அடிக்கிறேன் என்று கோபமா உங்களுக்கு. இந்தக் கூத்திக்கள்ளன் சாமியார் வேஷத்திலே அடிச்ச கொள்ளையிலே, இது எந்த மூலை? பணத்தைக் கொடுத்தான். விட்டேனா? "சரி" எங்க அச்சாபீஸ்காரன் உனக்குச் சினேகிதனாச்சே, அவனிடம் எப்படியாவது சொல்லி, மறுபடியும் நம்மை வேலையிலே சேர்த்துக் கொள்ளச் சொல்லணும் தெரியுதா? என்றேன். சரி, என்றான் அழுகுரலில்.

இருட்டு, நடுநிசி, ஒரு பயமும் இல்லாமல், வீட்டுக்கு நடந்தேன், அந்த இரண்டு சனியன்களும் கொஞ்சம் தொலைவாகவே என் பின்னால் வந்தார்கள். வீட்டுக்குப் போனேன், வேகமாகக் கதவைத் தட்டினேன், கொஞ்சம் அதிகாரக் குரலிலேயே, "வேலாத்தா! வேல்! வேலா! டீ, வேலாத்தா!" என்று பல ரகத்திலே, பல சுருதியிலே கூப்பிட்டேன், எனக்கென்ன பயம், எட்டு ரூபா இருக்கு அந்தக் கொட்டை கட்டி கொடுத்த பணம், "எது அதிகாரம் தெருவே தூக்குது" என்று அர்ச்சனை செய்து கொண்டே கதவைத் திறந்தாள் வேலாத்தா; வழக்கமாகப் பயத்தைக் காட்டும் என் கண்களிலே அதிகாரப் பார்வையைக் கண்டாள். அவளாலே கோபத்தை அடக்க முடியவில்லை. "வேலை போச்சின்னு கொஞ்சமானா கவலை இருக்குதா உனக்கு. விடிய விடிய ஊர் சுத்திவிட்டு வர்ரயே" என்றாள். "சீ" கழுதே! வேலை போச்சாம் வேலை! வேளைன்னு சொல்லுடி! நமக்கு இருந்த போறாத வேளை போச்சுன்னு சொல்லு" என்று கூறிக்கொண்டே எட்டு ரூபாயைக் கொட்டினேன்! அவள் பார்த்த பார்வை இருக்கே, என்னவென்று சொல்வேன்! நாளைக்கு வேலைக்கும் போவேண்டி!" என்றேன். ஏன்? எப்படி? ஏது? என்று அவள் எத்தனையோ தடவை கேட்டாள். ரொம்ப காலத்துக்கு முன்னாலே கொஞ்சுவாளே, "ராசா இல்லை! கண்ணு இல்லை!" என்று, அந்த பழையது கூடப் போட்டாள். கடைசியில், பூரா விஷயமும் சொன்னேன். அவளுக்கு வந்த சந்தோஷத்திலே — வெட்கமாகக்கூட இருக்கு சொல்ல— குமரி போலே — என்னையும் புது மாப்பிள்ளைக் கோலத்திலே இருப்பதுபோலவே—எண்ணிக்கொண்டு "அட என் ராசா!" என்று சொல்லி ....ஒரு முத்தம் கூடக் கொடுத்தாள்!!

அன்று சொன்னவை

பண்பாட்டைப் பெறுவது கடினம்

பதவி இன்று வரலாம்; நாளை போகலாம். ஆனால் பண்பாட்டைப் பெறுவது கடினம். பண்பாட்டை இழக்கும் பேதையாக ஒருபோதும் மாறக்கூடாது.

தகவல்: சி. என். ஏ. பாபு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மற்ற கட்சிகள் நிலை

அதற்கேற்ப அந்தத் துறை இன்றைய தினம் நடைபெற்று வருகிறது.

மற்ற கட்சிக்காரர்கள் தலையிடவே இல்லையா? பொது விவகாரம் ஆகட்டும் — தனிப்பட்ட விவகாரங்கள் ஆகட்டும்— இவைகளிலே யாரும் தலையிடவே இல்லையா?-என்பது ஒரு பிரச்னை!

இரண்டாவது, மற்ற கட்சிக்காரர்கள் கொடுத்த மனுக்கள் அலட்சியப்படுத்தப் பட்டனவா என்பது இன்னொரு பிரச்னை!

எனக்கு நன்றாக நினைவு இருக்கின்றது!

திரு சவுந்திர பாண்டியன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆவார்! திருநெல்வேலி மாவட்டத்திலே பஞ்சாயத்துத் தலைவர் செல்லையா நாடார் என்பவர் வள்ளியூர் பஞ்சாயத்து ஒன்றியத் தேர்தலில் சவுந்திர பாண்டியன் ஆதரவு கொடுத்ததால் எதிர் மனுதாரர்கள் 11 பேர்கள் எனக்கும் சவுந்திரபாண்டியனுக்கும் மிரட்டல் கடிதம் வந்ததாகக் குறிப்பிட்டார்! அது என்னிடத்திலே அளிக்கப்பட்டது. உடனடியாக அது காவல் துறைக்குத் தெரிவிக்கப்பட்டு, அந்த மனுவைப்பற்றி காவல்துறை விசாரித்து யார்—யாரை அவர் சுட்டிக்காட்டியிருந்தாரோ — அவர்கள் எல்லாம் அப்போதே எச்சரிக்கப்பட்டிருக்கிருர்கள். அதைப் போலவே பல நிகழ்ச்சிகளை நான் எடுத்துக் காட்டமுடியும்.

காங்கிரஸ் ஆட்சியைச் சார்ந்தவர்கள் எடுத்துச் சொல்கிருர்கள் என்பதற்காகவோ, அல்லது கம்யூனிஸ்ட், அல்லது சுதந்திராக் கட்சிக்காரர்கள் எடுத்துச் சொல்கிருர்கள் என்பதற்காகவோ அவைகள் அலட்சியப்படுத்தப்படுவதில்லை!

இங்கே கூட—சட்டமன்றத்தில் டாக்டர் ஹாண்டே போன்றவர்கள் சில விவகாரங்களை எடுத்துத் தந்ததும் நான் அவைகளை உடனடியாக விசாரிக்கச் சொல்லி அதிகாரிகளுக்குத் தந்து, அதிகாரிகளிடமிருந்து வந்த பதில்களையும் அவர்களிடத்திலே நான் உடனடியாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

ஆகவே, இந்தத் துறையில் பாரபட்சமற்ற முறையில் கட்சி மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்ட வகையில் பணிகள் நடைபெறுகின்றன!

சந்தேக வழக்குகள் போடப்படுவது அறவே நீக்கப்பட வேண்டும்; அகற்றப்பட வேண்டும் என்று இங்கே பேசிய பெரும்பாலான உறுப்பினர்கள்—குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்கள் எடுத்துக் கூறினர்கள்!

இந்த சந்தேக வழக்குகளில்— ஏதுமறியாத பாமரர்கள்-அப்பாவிகள் சிக்கிக் கொள்கிருர்கள் என்றெல்லாம் எடுத்துக்கூறப்பட்டது. இதை இந்த அரசு கவனிக்காமல் இல்லை!

விரைவான தீர்வுக்கு உத்தரவு

இப்போது உள்ள வழக்கத்தின் படி ஒருவர் கைது செய்யப்படுவாரானுல் அவர் தான் இந்த ஊரைச் சேர்ந்தவர் என்று சொன்னுல் அந்த ஊருக்குக் கடிதம் எழுதி அந்த ஊரிலுள்ள ஸ்டேஷனிலிருந்து அதுபற்றிய தகவல் வருவதற்கு இடையில் ஆகும் ஒன்று அல்லது இரண்டு வார காலம் ஆகி, அதுவரையில் தன்னைப் பற்றி ஏதும் தெரிவித்துக் கொள்ள முடியாத சூழ்நிலையில் குற்றமற்றவர் சில நேரங்களில் சிறையில் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டு விடுகிறது.

இதைத் தவிர்ப்பதற்காக கூடுமான வரையில் தொலைபேசியைப் பயன்படுத்தி அங்கேயிருந்து தகவலறிந்து இரண்டொரு நாட்களிலேயே அவர் நிரபராதி என்றுல் விடுவித்தும், அப்படியின்றி குற்றவாளியென்றுல் வழக்குத்தொடர்ந்தும் நடவடிக்கை எடுத்துகொள்ள வேண்டும் என்று அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டு இருக்கின்ருர்கள்.

எனவே இப்படிச் சந்தேகத்தின் பெயரால் கைது செய்வதற்காக, உண்மையான குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதற்காக வேறுவிதமான சட்டம்அல்லது நடைமுறையைக் காணும் வரையில், அது வரையில், இந்த இடைக்காலத்தில் இப்படிக் கைதுசெய்யப்படும் போது அவற்றில் துரிதமாக விரைவாக தீர்வு கண்டிட வேண்டும் என்று எடுத்துச் சொல்லப்பட்டு இருக்கின்றது.

காவல் துறையினர் மிகவும் நாணயமாக நடந்து கொள்ள வேண்டும் என்று எடுத்துச்சொல்லப்பட்டது. அங்கத்தினர்கள் யாரும் மொத்தமாகக் காவல் துறையை அப்படியே குற்றம் சொல்லவில்லை என்பதை நான் முழுக்க முழுக்க நம்புகிறேன்.

நமது பொன்னப்ப நாடார் அவர்கள் பேசும் நேரத்தில்கூட விவாதத்தில் அதிகமாகச் சூடு பிடிக்கவில்லை என்ருர்கள். சூடு இல்லாத காரணம் எதிர்க் கட்சியினுடைய திறமைக் குறைவு என்று நான் நிச்சயமாகச் சொல்லமாட்டேன். நீங்கள் நினைத்தால் சூட்டை நிச்சயமாக உருவாக்கியிருக்க முடியும்!

(சிரிப்பு)

பொன்னப்ப நாடார்: நீங்கள் அப்படிச் சொன்னுலும் நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிருேம்.

முதல்வர்: சொல்லாமல் இருக்கும்போது ஏன் வலிய ஏற்றுக் கொள்ளவேண்டும்.

சூடும் திறமைக் குறைவும்

எனவே நான் எதிர்க் கட்சியினருடைய திறமைக் குறைவு என்று சொல்லமாட்டேன், காரணம் பதிலாக சூடாகப் பேசும் அளவிற்கு இந்தத் துறை எந்தத் தவறுகளையும் அந்த அளவுக்கு இழைத்து விடவில்லைஎன்பதுதான். எனவே தான் சூடேறவில்லை. தங்கமணி போன்றவர்களும் நாடார் போன்றவர்களும் திருமதி அனந்த நாயகி, அம்மையார் போன்றவர்களும் டாக்டர் ஹண்டே போன்றவர்களும் பேசினுலும் தங்கள் தொகுதியில் நடந்ததாகச் சொல்லப்படும் இரண்டோர் நிகழ்ச்சிகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவை பற்றி அவ்வப்பொழுது துரிதமாக நடவடிக்கை எடுத்து ஆவன செய்யவேண்டும் என்று அதிகாரிகளுக்கு அவ்வப்போது கட்டளை பிறப்பித்து இருக்கின்றேன்.

இன்னும் சொல்லப்போனுல் நமது சங்கமுத்துத் தேவர் அவர்கள் தொகுதியில் நடந்த ஒரு சம்பவத்தைக்கூட நினைவுப்படுத்தினுர்கள்! காலையில் நினைவு படுத்தினுர்கள்; மறுநாள் காலையிலே அதுபற்றி காவல் துறையினரிடமிருந்து அனைத்து தகவல்

கள் பெற்று அதன் விவரங்களை நமது நாடார் அவர்கள் மூலமாக திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களுக்குத் தந்து இருக்கிறேன்.

எனவே இத்துறை விழிப்போடும் நல்ல ஒழுக்கத்தோடும் நடுநிலையோடும் நடந்து கொள்ள வேண்டிய பெரும் பொறுப்பை இந்த அரசு ஏற்றுக்கொண்டு இருக்கிறது.

அதே நேரத்தில் முஸ்லிம் லீக் தலைவர் மொய்தீன் அவர்கள் சொன்னதை மறந்து விடுவதற்கு இல்லை. 'காவல் துறையினரிடம் பண்பை எதிர்பார்ப்பது நியாயம்! நாமும் அதே நேரத்தில் அவர்களிடமும் பண்போடு நடந்து கொள்ள வேண்டும்' என்று குறிப்பிட்டார்கள். அது முற்றிலும் உண்மை.

காவல் துறையினரை அணுகுகின்றவர்கள் பண்போடு நடந்து கொள்ளவில்லை என்ற காரணத்தினால் காவல் துறையினரும் பண்பற்ற முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறேனா என்றால் இல்லை. சிலர் பண்பற்ற முறையில் நடந்து கொண்டால் கூட காவல் துறையினர் தங்களுக்கே உள்ள பண்பை விட்டுக் கொடுக்காமல் நடந்து கொள்ள வேண்டும் என்றுதான் நான் காவல் துறையிலுள்ள எல்லா அதிகாரிகளுக்கும் ஏனைய அலுவலாளர்களுக்கும் என் வேண்டுகோளாக விடுக்கக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

ஆனால், காவல் துறை நன்கு செயல்பட வேண்டுமானால் அவர்கள் பற்றித் தவறான செய்திகளை, தகவல்களை வெளியிட்டு காவல் துறையினருக்கு இழுக்கு ஏற்படுத்தும் வகையில் அரசியல் கட்சித் தலைவர்களும் அரசியல் ஏடுகளும் முனையக்கூடாது என்பது என்னுடைய பணிவன்பான வேண்டுகோளாகும்.

செய்தி ஏடுகளின் கடமை என்ன?

இன்றைக்கு எத்தனையோ செய்திகள் வருகின்றன. இன்றைக்கு ஒரு பத்திரிகையிலே பார்க்கின்றேன். ம. பொ. சிவஞானம் அவர்களின் மருமகன் எங்கேயோ கார் ஓட்டியதால் யாரோ ஒரு பையன் அடிபட்டு செத்துவிட்டான். அவர்மீது வழக்குப் போடவில்லை என்று ஒரு பத்திரிகையிலே செய்தி வந்திருக்கின்றது.

நான் அதிகாரிகளிடம் கேட்கிறேன். உடனே அதிகாரிகள் அந்த இடத்திலேயே அவர் கைது செய்யப்பட்டார் என்றும், அப்படி கைது செய்யப்பட்டவர் மீது வழக்கு போடப்பட்டு அவர் ஜாமீனில்தான் விடுதலையாகி இருக்கிறார் என்றும் தகவல் கொடுக்கின்றார்கள். ஆகவே தவறான தகவல்களை இன்றைக்குப் பத்திரிகையிலே போட்டு விடுகின்றோம்.

அண்மையிலே, 15-ம் தேதி என்று கருதுகின்றேன். சென்னை மாநகரத்திலே மதுவிலக்கு ஒத்தி வைக்கப்படுவதை எதிர்த்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் முன்பாக டில்லியிலிருந்து வந்த சுசீலா நய்யார் அவர்களும் தமிழகத்தில் உள்ள சிலரும் சேர்ந்து காலையில் 54-பேர் பிறகு மாலையில் 94 பேர் என்ற அளவிலே, உண்ணாவிரதத்தில் ஈடுபட்டார்கள்.

அது அமைதியாக நடைபெறுவதற்கு காவல் துறை பெரும் முயற்சி எடுத்துக்கொண்டு நல்ல பாதுகாப்பு அளித்திருக்கின்றது.

ஆனால் பத்திரிகையிலே என்ன செய்தி வருகின்றது? உண்ணாவிரதத்தில் இருந்து கொண்டிருக்கும்போது துறைமுகத்திலிருந்து தொழிலாளர்கள் வெளியே வந்து உண்ணாவிரதம் இருந்த பந்தலைப் பிரித்துப் போட்டு, படங்களையெல்லாம் கிழித்துப் போட்டு அலங்கோலம் செய்தார்கள். அமளி துமளி ஏற்பட்டது. அவ்வளவு பேரும் திராவிட முன்னேற்றக் கழக அரசால் ஏவி விடப்பட்டவர்கள். காவல் துறை கைகட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது. அதற்குப் பிறகுதான் 10-பேராக இருந்த காவலர்கள் 100 பேராகப்பெருகி கலவரத்தை அடக்கினார்கள் என்று செய்தி போடப்படுகிறது.

அப்படிப்பட்ட தவறான தகவல்கள் போடப்படுகின்றன.

மிகைப்படுத்திப் போடுவது ஒன்று; பொய்யையே போடுவது ஒன்று.

400 பேர் இருந்தார்கள் என்றால்; 4,000 பேர் இருந்தார்கள் என்று போடுவது மிகைப்படுத்திப் போடுவது 400 பேரில் 300-பேர் அந்த இடத்தில் செத்துவிட்டார்கள் என்று போடுவது பொய் போடுதல்.

அதைப் போலத்தான் அங்கே நடைபெற்ற உண்ணாவிரதத்தில் துறைமுகத்திலிருந்து தொழிலாளர்கள் வெளியே வந்தார்கள். வந்தவர்களில் சில பேர் உண்ணாவிரதம் இருந்த இடத்திற்கு அப்பால், வெகு தொலைவிற்கு அப்பால், நின்றுகொண்டு மதுவிலக்குரத்துக்கு ஆதரவாக கோஷமிட்டார்கள், அது உண்மை. ஆனால் உடனடியாக போலீஸ் தலையிட்டு அவர்களை அப்புறப்படுத்தி யிருக்கிறார்கள். இதுதான் நடந்த நிலவரம்.

ஆனால் உண்ணாவிரதம் மேற்கொண்டவர்கள் கூட சொல்லாத குறை பத்திரிகையிலே வேண்டுமென்றே போடப்படுகிறது.

தேர்தல் கொலைகள்

தேர்தல் நேரத்தில் நடந்த அரசியல் கொலைகளைப் பற்றிச் சொன்னார்கள் தேர்தல் நேரத்தில் அரசியல் கட்சி சார்புள்ளவர்கள் பத்துப் பதினேழு பேர்கள் கொல்லப்பட்டார்கள் என்று கூறினார்கள். வெவ்வேறு விஷயங்களுக்கு எல்லாம் அரசியல் வண்ணம் பூசப்படுகிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. பத்திரிகையில் ஒரு காங்கிரஸ்காரர் கொல்லப்பட்டார் என்றால், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கொன்றார்கள் என்பதாக செய்தி போடுவதும் தவறு! திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் கொல்லப்பட்டால் காங்கிரஸ்காரர்கள் தாக்கினார்கள் என்பதாகச் செய்தி போடுவதும் தவறு! இந்த இரண்டையுமே நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்—இப்படி செய்தி போடுவது வழக்குக்கு உறுதுணையாக அமையாது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

தேர்தல் நேரத்தில் திருநெல்வேலி வில்லாகுளம் கிராமத்தில் பரமுமுத்துத்தேவர். ஹரிகிருஷ்ண நாடார் என்பவர்கள் கொல்லப்பட்டார்கள். இது சம்பந்தமாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 27 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். வழக்கு சப் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரணையில் உள்ளது.

தூத்துக்குடியில் பட்டு நாடார் என்பவர் கொல்லப்பட்டார். இது சம்பந்தமாக 7 காங்கிரஸ்காரர்கள்

கைது செய்யப்பட்டிருக்கிருர்கள். இந்த வழக்கும் விசாரணையில் உள்ளது.

தஞ்சாவூர் போய்யனூர் குடிகாடு என்ற இடத்தில் கன்னையன் என்பவர் கொலை செய்யப்பட்டார். இது சம்பந்தமாக காங்கிரஸ்காரர் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிருர். பட்டுக்கோட்டை சப்—மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் வழக்கு விசாரணையில் உள்ளது.

தஞ்சாவூர் நாலுவேதபதி என்ற இடத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த காளிமுத்து என்பவர் கொலை செய்யப்பட்டார். இது சம்பந்தமாக 12 காங்கிரஸ்காரர்கள் கைது செய்யப்பட்டிருக்கிருர்கள். வழக்கு திருத்துறைப்பூண்டி சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரணையில் உள்ளது.

தென்னூற்காடு இளவரசன்பேட்டை என்ற இடத்தில் சுப்பிரமணியம் என்கிற காங்கிரஸ்காரர் கொலை செய்யப்பட்டார். இது சம்பந்தமாக 5 திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கைது செய்யப்பட்டிருக்கிருர்கள். வழக்கு புலனுய்வில் உள்ளது.

செங்கற்பட்டு, பரங்கிமலை, புழுதிவாக்கம் என்ற இடத்தில் சின்னு என்ற வெங்கடசாமி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் கொலை செய்யப்பட்டார். இது சம்பந்தமாக 21 காங்கிரஸ்காரர்கள் கைது செய்யப்பட்டிருக்கிருர்கள். சைதை சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் வழக்கு விசாரணையில் உள்ளது.

சென்னையில் புளியந்தோப்பு என்ற இடத்தல் குருவையா என்ற காங்கிரஸ்காரர் கொலை செய்யப்பட்டார். குற்றவாளி யாரும் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை, வழக்கு புலனுய்வில் தொடர்ந்து உள்ளது. திருநெல்வேலி சம்பவத்திலும் தி. மு. கழகத்தினர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். தென்ஆற்காடு மாவட்டத்துச் சம்பவத்திலும் காங்கிரசார் கைது செய்யப்பட்டனர்.

இறந்தவர்கள் 8 பேரில் 5 பேர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். 3 பேர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். தயவு தாட்சண்யம் பாராமல் பாரபட்சம் இல்லாமல்—நாம் கொலை செய்யப்பட்டவர் எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்கள். குற்றவாளிகள் யார் என்று பார்க்காது வழக்கின் உண்மையான தன்மையை ஆராய்ந்து நீதி வழங்க இந்தக் காவல் துறையினர் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிருர்கள் என்பதை இந்த அவைக்கு அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படி எல்லா வகையிலும் நம் நாட்டில் சட்டம், அமைதி, ஒழுங்கு இவைகளைக் காப்பாற்ற பணியாற்றக்கூடிய இந்தக் காவல் துறை மானியத்தின்போது எடுத்துச் சொல்லியபடி ஒரு சில தவறுகள் இருக்குமானுல் அவற்றைக் களைய இந்த அரசு மேலும் முயற்சிகளை எடுத்துக் கொள்ளும்.

(தமிழகச் சட்டமன்ற உரை.)

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருக்கிறது என்பதையும் உலகம் ஒப்புக்கொண்டு பல்லாண்டுகளையும் கழித்துவிட்டது.

பொதுவாக அமெரிக்கா, தன் வல்லரசுத் தன்மையினையும், ஆதிக்கப் பிடிப்பையும் காலத்துக்கும் நீட்டித்துக் கொண்டிருக்கின்ற முறையிலேதான் கொள்கைகளை வகுத்துச் செயல்படுகிறது. இந்தக் கொள்கைகள் காரணமாகத்தான் பாகிஸ்தானில் ...ட ஒரு ஜனநாயக அரசு உருவாக முடியாமல் தடுக்கப்படுகிறது என்பதையும் கருத்தில் இருத்திக் கொண்டு—

"கிழக்குப் பாகிஸ்தானில் எந்தப் பகுதியையாவது கைப்பற்ற இந்தியா முயன்ருல், அதன்மீது பாகிஸ்தான் யுத்தப் பிரகடனம் செய்யும்."

—என்று அதிபர் யாகியாகான் பி. பி. சி. ரேடியோவுக்குத் தந்திருக்கிற செய்தியையும்,

"நாம் யுத்தப் பிரகடனம் செய்வோம்; இதை உலகம் கவனத்தில் கொள்ளட்டும். இதில் பாகிஸ்தான் தனியாக இராது."

என்ற செய்தியையும் ஆராய்ந்து பார்த்தால், இப்போது பாகிஸ்தான் அதிபர் யாசியாகானுக்கு போர் வெறியை ஊட்டிக் கொண்டிருப்பது சீனுவை விட, அமெரிக்காதான் என்று கூறிவிட முடியும்.

அந்தத் துணிவில்தான் பாக். அதிபர் இந்தியா மீது வாலை நீட்டிப் பார்க்கிருர். நீட்டட்டும்! விஷவாலினை வெட்ட வெகுநேரம் பிடிக்காது இந்திய மக்களுக்கு!

அதேவேளையில் பிடெல்காஸ்டிரோ சுட்டிக் காட்டியபடி வியட்னுமையடுத்து, அரபு-இஸ்ரேல் போர் என்ற இரண்டாவது போரையும் தாண்டி, நாமே அந்த மூன்ருவது போர்—

இந்தியா பாகிஸ்தான் போர்

தான் என்பதை எண்ணிக்கொண்டு அறைகூவலை ஏற்போம்.

முடிவு, அமெரிக்காவுக்கும் பிற வல்லரசுகளுக்கும் மரண அடியாகத்தான் இருக்கும் என்று, இந்திய நாட்டின் 53 கோடிப் பேரும் ஒரேகுரலில் ஒலிப்பதனையும் உலகம் உணரட்டும்!

—சொ. அ. முத்துராமன்

...யர் வெளியிடுபவர் சி.என்.ஏ. இளங்கோவன் அவர்களால். காஞ்சிபுரம்-3